விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 19 செவ்வாய்க்கிழமை (02.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

SATS-TECH ENGINEERS
T20
ICC WORLD TWENTY20 ENGLAND 09
Now available in dishtv & sundirect
New packages & Renewal
Call :-222 5908 / 222 8812

# புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் இலங்கைக்கு இந்தியா மறைமுக உதவி

## முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி தகவல்

(லண்டன்)

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இந்தியா மறைமுகமாக துணை போயிருப்பதாக இந்தியப் படையின் முன்னாள் அதிகாரி அசோக் மேத்தாவும், மனித உரிமை ஆர்வலர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

ராஜீவ் காந்தி படுகொலைக்காக விடுதலைப் புலிகளை பழிவாங்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா பல்வேறு ஆயுத உதவிகளை வழங்கியதாகவும் அசோக் மேத்தா கூறியிருக்கிறார். (14ஆம் பக்கம் பார்க்க)

## சாந்தன், கரிகாலன் ஆகியோர் வவுனியாவில் வைத்து கைது

விடுதலைப் புலிகளின் இசைக்குழுவின் தலைவரான சாந்தன் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் பின்னர் விடுதலைப் புலிகளின் பொருளாதாரப் பிரிவின் பொறுப்பாளராகவும் இருந்த கரிகாலன் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### அரசு தெரிவிப்பு

முகாமிலுள்ள பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இவர்களுள் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நூறு பேரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களிற்கு பொறுப்பானவராகக் கருதப்படும் கே.பி. எனப்படும் செல்வராஜா பத்மநாதனுடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகக் கருதப்படும் சிலரையும் படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

## டைட்டானிக் பெண் மரணம்



டைட்டானிக் கப்பலில் பயணம் செய்து உயிர் பிழைத்தவர்களில் இறுதியாக உயிர் வாழ்ந்தவர் என்ற பெருமையை பெற்ற மில்வினா டீன் தனது 97 ஆவது வயதில் மரணமானார்.

1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி 2227 பேருடன் பயணித்த டைட்டானிக் கப்பல் பனிப்பாறையில் மோதி விபத்திற் குள்ளான போது, மில்வினா டீனுக்கு வயது 9 வாரங்கள் மட்டுமேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னி உயிரிழப்புகள் குறித்து ஐ.நா. தொடர்ந்தும் விசாரணை

(நியூயோர்க்)

வன்னியில் மோதலின்போது மிகப் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதை ஐ.நா.மறைத்துள்ளது என்ற குற்றச்சாட்டுக்களை ஐ.நாவின் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். சரியான புள்ளிவிவரங்களை உறுதி செய்யத் தாம் தொடர்ந்தும் முயல்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மிக நீண்ட காலமாகவே இது குறித்து நாங்கள் எச்சரிக்கை விடுத்து வந்துள்ளோம் என ஐ.நாவின் மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகப் பேச்சாளர் எலிசபெத் பையெர்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக கொல்லப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதளவிற்கு உயர்வாகவுள்ளது என்பது குறித்து ஐ.நா.வெளிப்படையாகத் தெரிவித்து வந்துள்ளதுடன் இது குறித்த விவரங்களை (14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்
நாளை
கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை உயிரியல் பாட மாதிரி வினாத்தாள்.

## அரசியல் கட்டமைப்பை வென்றெடுக்கும் தேசிய கடமை ஒன்று காத்திருக்கிறது!

### பத்மநாதன் அறிக்கை

தமிழ் மக்களின் அரசியல், சமூகப்பொருளாதார இருப்பினையும் தற்சார்பு நிலையினையும் நிர்மூலமாக்குவதில் முனைந்திருக்கும் அரசாங்கத்தின் நோக்கத்தை எதிர்கொள்வதற்கும் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் கட்டமைப்பினை வென்றெடுப்பதற்குமான பாரிய தேசியக் கடமை நம்முன் காத்திருக்கின்றது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக உறவுகளுக்கான செயலகத்தின் பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பத்மநாதன் விடுத்துள்ள அறிக்கை எனத் தெரிவித்து இணையத் தளங்களில் வெளியான செய்தி வருமாறு,

அரசாங்கம் மக்கள் மீது ஏற்படுத்தியுள்ள மனிதப் பேரவலம் சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்களை அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து நிர்க்கதியாக்கி இடம் பெயர்த்து அனைத்துலகத்தின் கண்காணிப்புக்கு அப்பால் (14ஆம் பக்கம் பார்க்க)

## தீவிரமாகப் பரவும் டெங்குக் காய்ச்சல்

## நுளம்புகளைப் பரவச் செய்தால் 25 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கொழும்பு)

நுளம்புகளைப் பரவச் செய்தால் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான சட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

நாட்டில் இவ்வருடம் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் 27 பேர் டெங்கினால் உயிரிழந்ததோடு இவ்வருடத்தின் கடந்த 5 மாதங்களில் மாத்திரம் 70 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து டெங்கு நோயைப் பரப்பக் கூடிய சுற்றுச் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக அபராதம் அறவிடுவது மற்றும் தண்டனை விதிப்பதற்கான சட்டத்தை நேற்றுத் தொடக்கம் அமுலுக்குக் கொண்டு வரவுள்ளதாக சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதிக்கு புதிய கட்டளைத் தளபதிகள்


(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு புதிய பாதுகாப்புக் கட்டளைத் தளபதிகள் நியமனம் பெற்றுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கான புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக நியமனம் செய்யப்பட்டுள்ள அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத் திற்கான புதிய விசேட அதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த இராணுவத் தளபதியினால் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## புலிகளுக்கு பொது மன்னிப்பை அரசாங்கம் வழங்க வேண்டும்

### கூட்டமைப்பு கோரிக்கை



(லண்டன்)

சரணடைந்துள்ள விடுதலைப்புலிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பினை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளதாவது,

இளைஞர்கள் கூடுதலாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தது 83-ம் ஆண்டு நடைபெற்ற மோசமான இனக்கலவரத்திற்குப் பிற்பாடே. அதன் பின்னர் அவர்களுடைய போராட்ட காலத்தில் பல்வேறு ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அதில் எல்லாவற்றிற்கும் எல்லோரும் (14ஆம் பக்கம் பார்க்க)

# நடேசனும் புலித்தேவனும் சரணடையும் விபரம் அவர்கள் உயிரிழந்து 10 நிமிடங்களின் பின்பே தெரியும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் சீ.புலித்தேவன் மற்றும் அரசியல் துறை பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடையப் போவதான விடயம் அவர்கள் கொல்லப்பட்டு 10 நிமிடங்களின் பின்னரே தெரிய வந்தது.

அவர்கள் வெள்ளைக் கொடியோடு வந்து சரணடையப் போவது குறித்த விடயம் சுமார் 7,8 மணித்தியாலங்களுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தால் அவர்களை உயிரோடு கைது செய்திருப்போம் என்று இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை உயிரோடு பிடிப்பதன் அவசியம் குறித்து நாமும் அறிவோம். அவர்களை கைது செய்வதன் மூலம் பல்வேறு விடயங்க்ளை நாம் அறியக் கூடும்.

அவர்கள் சரண் அடையப் போவதை தெரிவிக்க தாமதமானதே கொல்லப்பட்டதற்கான காரணமாகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் இராணுவத் தளபதி மேலும் கூறியதாவது;

விடுதலைப் புலிகளின் சமாதான செயலக பொறுப்பாளர் சீ.புலித்தேவன் மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் சரணடைய வந்தபோதே படையினர் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர் என்று பல்வேறு தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

வன்னியில் இடம் பெற்ற இறுதிப் போர் நடவடிக்கைகளின் போது புலி உறுப்பினர்கள் அனைவரும் சுமார் 300 மீற்றர் நிலப் பரப்புக்குள்ளேயே முடக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் கடந்த 17ஆம் திகதி இரவு படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது அவ்வியக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

அத்துடன் 18ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் கொல்லப்பட்டமையும் உறுதி செய்யப்பட்டது.

அவர்கள் கொல்லப்பட்டு 10 நிமிடங்களின் பின்னர் என்னுடன் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அவர்கள் இருவரும் சரணடையப் போவதான விடயத்தினை எனக்குத் தெரிவித்தார்.

ஆயினும் அதற்குள் படையினரின் துப்பாக்கி ரவைகள் அவர்கள் இருவரின் உடலைத் துளைத்து விட்டன.

அவர்கள் சரணடையப் போவதை சுமார் 7 அல்லது 8 மணித்தியாலங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தால் நாம் அவர்களைக் கைது செய்திருப்போம்.

சர்வதேச ரீதியில் அரசாங்கத்துக்கு வழங்கப்படும் அழுத்தங்கள் காரணமாக காப்பாற்றப் படுவோம் என்று எண்ணியே அவர்கள் அதுவரையில் சரணடையாமல் இருந்திருக்கலாம்.

இருப்பினும் அவர்கள் தமது வெள்ளைக் கொடிகளை காண்பிக்க தாமதித்து விட்டனர் என்பதே உண்மையாகும் இவ்வாறு அவர் கூறினார். (ச-5)

## சமாசக் காரியாலயம் நாளை திறக்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசக் காரியாலயம் நாளை புதன் கிழமை தவிர்க்க முடியாத காரணத்தினால் திறக்கப்படமாட்டாதென பொது முகாமையாளர் செ.கெங்காதரன் அறிவித்துள்ளார். (ச-14)

## வில்பத்துக் காட்டில் மறைந்துள்ள புலிகளை கைது செய்ய விசேட தேடுதல்

வில்பத்து காட்டுப்பகுதியில் மறைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். காட்டுப்பகுதியின் எல்லையில் உள்ள கிராம மக்கள் மற்றும் ஏனைய தரப்பினரிடம் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வில்பத்துக் காட்டில் மறைந்திருக்கும் விடுதலைப் புலிகளை சரணடையுமாறு தொடர்பு சாதனங்களில் அறிவிக்கப்பட்டதாகவும், உரிய பதில் கிடைக்காததால் இந்த சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

வன்னியிலிருந்து வில்பத்து வனத்திற்கு புகுந்துள்ள விடுதலைப் புலிகள்,சிங்களவர்கள் மற்றும் ஏனைய இனத்தவர்களின் உதவியுடன் உணவுப் பொருட்கள்,மருந்து, எரிபொருள், மின்கலங்கள்,இரும்பு உருளைகள் போன்றவற்றை பெற்றுக் கொண்டுள்ளதை தாம் கண்டறிந்துள்ளதாக தெரிவித்துள்ள பாதுகாப்புத் தரப்பினர் அவற்றை வழங்கிய நபர்களை கைது செய்து தடுப்புக் காவலில் வைத்து விசாரித்து வருவதாகவும் கூறியுள்ளனர். (ச-5)

## கோதுமை மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு டப்ளின் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட கோதுமை மா மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கோதுமை மாவிற்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ. சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று கோதுமை மாவினை கோண்டாவில் அரச உணவுக்களஞ்சியத்தில் பெற்று பொதுமக்களுக்கு தட்டுப்பாடு அற்ற நிலையில் விநியோகிக்குமாறும் மொத்த விற்பனை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை எனவும் அரசாங்க அதிபர் அறியத் தந்துள்ளார். (ச)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

2009ஆம் ஆண்டிற்கான யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்கள் யாழ். மாவட்டத்திற்கு வெளியில் தமது உத்தியோக பூர்வ கடமையில் இருப்பதனால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

இக் கூட்டம் நடைபெறும் புதிய திகதி கூடிய விரைவில் இணைத்தலைவர்கள் அறிவித்தவுடன் அறியத்தரப்படும் என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் எதிர் வரும் 5ஆம் திகதி நடைபெறவிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச)


**விற்பனைக்கு**

கோண்டாவில் வடக்கில் சகல வசதிகளுடன் கூடிய தோட்டக் காணி 21/2 பரப்பு விற்பனைக் குண்டு.

தொடர்பு: பொ.நவரத்தினம்,
புலவர் வீடியோ லேன்,
கோண்டாவில் வடக்கு.
T.P.No:0779587317


(2778)


# கலைப்பீடத்தின் கண்ணீர் அஞ்சலி

## அமரர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா

தோற்றம்
02
02
1947

மறைவு
29
05
2009



எங்கள் கலைப்பீடத்தின்
உயர் சிந்தனையாளன்
புதிய பல கனவுகளோடு
கலைப்பீடத்தினை மேம்படுத்த
உழைத்த கல்வியாளன்
பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜாவுக்கு
எங்கள் கலைப்பீடத்தின்
கண்ணீர் அஞ்சலி

**குறிப்பு :**

**இன்று 02.06.2009 பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்து பல்கலைக்கழக சமூகத்தினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்
02-06-2009

(C-2525)

# இன்று ஒரு தகவல்

## பாம்புகள்

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்று சொல்வார்கள். நாம் நடுங்குவதற்கு கேட்கவா வேண்டும்?

அதுவுமில்லாமல் நாம் என்ன பாம்புக்கு மட்டுமா நடுங்குகிறோம். பல்லியைப் பார்த்துக் கூட பயப்படுகிறோம்.

பாம்புக்கு பழிவாங்கும் குணம் உண்டு என்று சில புராணக் கதைகளிலெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பொழுதும் சிலர், வழியில் ஒரு பாம்பை அடித்து விட்டால் மறுபடியும் அந்த வழியால் போவதற்குப் பயப்படுவார்கள். ஏனென்றால் மறுபடியும் அந்தப் பாம்பு தேடிவந்து பழி வாங்கி விடுமாம்.

பாம்புக்கு பழிவாங்கும் குணம் இருக்கிறது என்பதற்கு விஞ்ஞான பூர்வமாக ஆதாரம் எதுவும் கிடையாது.

நான் ஒரு நல்ல பாம்பைப் பார்த்தேன். அதன் தலையில் ஒரு மாணிக்கக்கல் இருந்தது என்று கதை விடுபவர்களும் உண்டு.

பாம்பின் தலையில் மாணிக்கமும் இல்லை. வைடூரியமும் இல்லை. சில பாம்புகளின் தலையில் கல் மாதிரி ஒரு பொருள் உண்டு. கெட்டியான திசு அது. அதில் ஒளி வீசாது. அதற்காக கிட்டப்போய் யாரும் உற்றுப் பார்க்காதீர்கள்.

நாகபாம்பும் – சாரைப்பாம்பும் இணைந்து இனப்பெருக்கம் செய்வதாக சொல்வதுண்டு. அதுவும் தவறு.

இனப்பெருக்கத்தைப் பொறுத்தவரை பாம்பிடம் ஒரு விசேடம் உண்டு. என்ன தெரியுமா? பாம்பில் முட்டையிடும் வகையும் உண்டு. குட்டி போடும் வகையும் உண்டு.

உதாரணமாக – நாகபாம்பு முட்டையிடும். விரியன் பாம்பு குட்டி போடும்.

பாம்புக்கு கண், நாக்கு, மூக்கு எல்லாம் உண்டு. ஆனால் காது கிடையாது. அதனால் காற்றுமூலம் வரும் ஒலியலைகளை பாம்பு உணர்வதில்லை.

பாம்பாட்டி மகுடி வா்சிக்கிறார் என்றால், அதைக் கேட்டு விட்டு அந்த ராகத்தில் மயங்கிப் போய் பாம்பு ஆடவில்லை. மகுடி ஆடுகிறது அந்த அசைவைப் பார்த்து விட்டு இதுவும் தலையை ஆட்டுகிறது. அவ்வளவு தான்!

நாம் கூட சில சமயம் இதுபோல் செய்வதுண்டு. கச்சேரி செய்பவர் என்ன ராகம் பாடுகிறார் என்பதெல்லாம் நமக்கொன்றும் புரியாது. இருந்தாலும் அவர் தலையை ஆட்டிக் கொண்டிருப்பது நமக்குத் தெரியும். அதைப் பார்த்து விட்டு நமது தலையையும் ஏன் சும்மா வைத்திருக்க வேண்டும் என்று சொல்லி ஆட்டிக் கொண்டிருப்போம்.

பாம்பு தரையில் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டு சுற்றுச் சூழலை புரிந்து கொள்கிறது. ஒரு சின்ன அதிர்வு இருந்தால் கூட அது எச்சரிக்கையாகிவிடும்.

நண்டு, சிலந்தி, பல்லி மாதிரி பாம்பும் தோலுரிக்கிறது. எதற்காக இப்படிச் செய்கிறது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.

பாம்பு தண்ணீர் குடிப்பது அபூர்வமான செயல். கோயில்களில் பாம்புக்கு பால் வைப்பதுண்டு. அதை வந்து பாம்பு குடித்தாலும் தண்ணீருக்குப் பதிலாக அதைக் குடிக்கிறது என்றுதான் அர்த்தம். பாம்புக்குப் பால் என்பது கட்டாயமாக தேவைப்படும் ஒரு உணவல்ல.

இருந்தாலும் – சிறுத்தை, மான், குரங்கு இவற்றையெல்லாம் விழுங்கக்கூடிய மலைப் பாம்புகளும் உண்டு.

நாகபாம்பின் விஷம் மயிலைப் பாதிப்பதில்லை. அதே போன்று ஒருவகையான வான் கோழியையும் பாதிப்பதில்லை.

பொதுவாக உலகத்தில் உள்ள பாம்பு வகையில் முக்கால் வாசிக்கு விஷம் கிடையாது.

மனிதர்கள் அவ்வப்போது ஏதாவது சாதனை செய்து செய்து உலகசாதனைப் பட்டியலில் தன்பெயர் வரவேண்டும் என்று நினைப்பார்கள். சிலபேர் கண்ணாடிக் கூண்டுக்குள் விஷப்பாம்புகளை விட்டு அவற்றுடன் 6 நாள் – 10 நாள் என்று இருந்து காட்டுவார்கள். பத்திரிகையில் படித்திருப்பீர்கள்.

அப்படிச் சாதனை செய்த ஒருவர் பாம்புக் கூண்டுக்குள் நுழையும் போது மிகவும் துணிச்சலுடன் உள்ளே போனார். சிரித்துக்கொண்டே இருந்தார். 10 நாட்கள் கழித்து – சாதனை முடிந்து வெளியே வந்தார். உடம்பெல்லாம் உதற ஆரம்பித்தது. பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் இப்படி?" என்று கேட்டார்கள்.

"ஒன்றும் இல்லை. நான் மறுபடியும் வீட்டுக்கு போய் குடும்பம் நடத்த வேண்டுமே! அந்த ஞாபகம் வந்துவிட்டது" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முதியவர்களை உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கும் பொறுப்பு பிரதி பொலிஸ் அதிபரிடம் ஒப்படைப்பு

## உடனடி நடவடிக்கைகள் ஆரம்பமாகவில்லையென மக்கள் கவலை

கொழும்பு

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த முதியர்களை அவர்களது உறவிர்களிடம் செல்ல அனுமதிக்கும் பொறுப்பு வன்னிப்பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவ உயரதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த பொறுப்பு கடந்த வாரம் பொலிசாரிடம் வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து வந்துள்ள சுமார் 3 இலட்சம் பொதுமக்கள் மத்தியில் ஆயிரக்கணக்கான முதியவர்கள் இருப்பதாகவும் இவர்களில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் உறவினர்களுடன் சென்று வசிப்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

இதுவரையில் சுமார் 2 ஆயிரம் பேர் வரையில் இவ்வாறு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் தனித்திருந்தவர்கள், குடும்பங்களுடன் இருந்தவர்கள், குடும்ப உறுப்பினர்களைப் பிரிந்து முகாம்களில் வசித்தவர்கள் என பலதரப்பட்டவர்களும் அடங்குவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பெரும் எண்ணிக்கையிலான முதியவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் உதவியற்று தனிமையில் வாடும் பல முதியவர்கள் குறித்து அதிகாரிகள் இன்னும் கூடிய கவனம் செலுத்தவில்லை என்றும் முகாம்களில் தவிக்கும் முதியவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

முதியவர்களை விடுவிக்கும் பொறுப்பு இராணுவத்தினரிடமிருந்து பொலிசாரிடம் மாற்றப்பட்டுள்ள போதிலும் உடனடியாக நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

## மன்னாரில் முதியவர்களுக்கான வதிவிடம் அமைக்க திட்டம்

கொழும்பு

வவுனியாவிலுள்ள நிவாரணக் கிராமங்களில் வாழும் முதியர்கள் தங்கவென மன்னாரில் சகல வசதிகளும் கொண்ட விசேட வதிவிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பிரதி அமைச்சர் நிமல் பிறேமசிறி கருத்து வெளியிடுகையில்,

சகல உறவினர்களையும் இழந்த முதியவர்கள் இந்த வதிவிடத்தில் தங்க வைக்கப்படுவார்கள் என்று கூறினார். (ஓ-4)

## விண்ணப்பங் கோரல்

தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சினால் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் கற்கை நெறிகளுக்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அவரவர் தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய கற்கைநெறிகளுக்கு தேவையான எண்ணிக்கைகளுக்கேற்ப மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உரிய தொழிநுட்பக் கல்லூரியின் அதிபருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (ஓ-6)

## இந்துப் பூசகர்களுக்கான இருவாரகால வதிவிடப் பயிற்சி

(கொழும்பு)

இந்து ஆலயங்களிற் பணிபுரியும் அந்தணரல்லாத இந்துப் பூசகர்களுக்கான இரண்டு வாரகால வதிவிடப் பயிற்சி நெறியொன்றை எதிர்வரும் ஜூலை மாதமளவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென இப்பயிற்சியைப் பெற விரும்பும் பூசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர், தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கடமைபுரியும் ஆலயத்தின் பெயர் – முகவரி, கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம், தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை, இதற்கு முன் இத்தகைய பயிற்சிகள் பெற்றிருப்பின் அவற்றின் விபரம் போன்ற விபரங்களை வரிசைக் கிரமமாகக் குறிப்பிட்டு ஆலயத் தலைவர், செயலாளரின் உறுதிப்படுத்தலோடு "பணிப்பாளர். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு - 04" என்ற முகவரிக்கு இம்மாதம் 15 ஆம திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இந்துப் பூசகர் பயிற்சி - 2009" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இவ்வாண்டு முதற் தடவையாகப் பயிற்சி பெறவுள்ள 40 வயதிற் குட்பட்ட பூசகர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியின் போது ஆலயப் பூஜை முறைகள், கிரிய்யை விபரங்கள், ஆசார அனுட்டானங்கள், சமய தத்துவங்கள் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (ஓ)

## இராசி பலன்

02.06.2009

(வைகாசி 19, செவ்வாய்க்கிழமை)

தசமி முன்னிரவு 10.20 மணிவரை

உத்தரம் முற்பகல் 7.39 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சுபநேரம் 10.22-11.52 மணிவரை

அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், ஆரோக்கிய நிலை, பண வருவாய், திர்பயணம். |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், வேலைச்சுமை, காரிய இடையூறு, தனவிரயம் |
| மிதுனம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, முயற்சி தாமதம், உறவினர் வருகை. |
| கடகம் | கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, போசன நன்மை. |
| சிங்கம் | கௌரவக்குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம், சிந்தனை மிகுதி. |
| கன்னி | சயன சுகம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, போசன நன்மை. |
| துலாம் | அமைதிக்குறைவு, பிதாசிந்தை, சுபசெலவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | குடும்ப மகிழ்ச்சி, தனலாபம், காரிய சித்தி, பெருமையடைதல். |
| தனுசு | அதிகாரம், தூரதேசச்செய்தி, பிறர் உதவி, முயற்சி கைகூடும். |
| மகரம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய திட்டமிடல், ஆரோக்கியக் குறைவு, அதிகசெலவு. |
| கும்பம் | எதிரிகள் தொல்லை, முயற்சி தடங்கல், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| மீனம் | களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், பாராட்டு, தனலாபம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 180 | 100 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 80 |
| தக்காளி | 500 | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 80 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 80 |
| பூசணி | 25 | 40 | 30-60 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 180 |
| பாகற்காய் | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 90 | 110 | 80 |
| கரணைக் கிழங்கு | 70 | 80 | 80 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 100 | -- |
| கறிமிளகாய் | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 |
| கீரை – 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 130 | 130 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 28-30 |

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதிரிபீட விநாயகப் பெருமானுக்கான புதிய சிற்பத் தேர் வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை காலை10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், சிறப்புரையை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் வழங்கவுள்ளதுடன் காலை 11 மணிக்கு ஆலய நிர்வாக சபைத் தலைவர் ஜெ. முத்துக்குமாரசாமி தலைமையில் சிற்பத் தேர் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது

(அல்வாய்)

Gods own children foundation நிறுவனத்தினரின் ஆதரவுடன் எதிர்வரும் 6ஆம் திகதி காலை10 மணிக்கு ஸ்ரீ பத்மநாதன் இல்லம், கிராமசபை ஒழுங்கை, மந்திகை, புலோலி என்ற இடத்தில் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையத்தில் உடல், உள ரீதியாகப் பாதிப்படைந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறுவர்கள், மெல்லக் கற்போர் ஆகியோருக்கான வகுப்புக்களும் நடைபெறவுள்ளது.

இதன்பிரதான நோக்கம் அனைவருக்கும் சமமான சிறந்த கல்வி வழங்கல், சத்துணவு மற்றும் கல்விக்கான உபகரணங்கள், சீருடைகள், பாதணிகள் அனைத்தும் இலவசமாக வழங்கல், இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சிகளை வழங்கி அவர்களின் எதிர்கால வாழ்வை நம்பிக்கையுடையதாக்குதல் என்பனவாகும். (ஓ-6-19)

## மோட்டார் சைக்கிள்-லொறி விபத்தில் இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் லொறி என்பன நேருக்கு நேர் மோதியதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் கே.கே.எஸ்.வீதி தாவடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் கே.கே.எஸ்.வீதி இணுவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் (வயது-37) என்பவரே மரணமடைந்துள்ளார்.

பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணத்தில் இருந்து இணுவில் நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை தாவடிப் பகுதியில் லொறி ஒன்றுடன் மோதியதில் படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-7)

## திருநெல்வேலி கிழக்கு, மத்திய பகுதிகளில் காய்ச்சல், சிரங்கு நோய்த் தாக்கம்

திருநெல்வேலி கிழக்கு மத்திய பகுதிகளில் ஒரு விதமான காய்ச்சல் மற்றும் சிரங்கு நோய் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மாணவர்களைத் தாக்கும் இவ் வியாதிகளினால் பாடசாலைகள், கல்வி நிலையங்களில் மாணவர்களின் வரவு குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-36)

# நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான யூன் மாதத்துக்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் 4ஆம்திகதி வியாழக்கிழமை நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

# தொழில்நுட்பப் பயிற்சிநெறி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது



தொழில்நுட்பக் கல்லூரியில் நேர்முகப் பரீட்சைக்காக காத்திருக்கும் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

"வடக்கின் வசந்தம் 2009 விசேட 180 நாள் வேலைத் திட்டத்திற்கமைய தொழில்நுட்பப் பயிற்சிநெறி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சையும் உடன் மாணவர் அனுமதியும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் வைத்து நடத்தப்படுகிறது.

பயிற்சிநெறிக்குத் தகுதி பெற்ற அனைவருக்கும் அனுமதி வழங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் 5ஆயிரம் மாணவர்களுக்கு உடன் அனுமதி வழங்குவதுடன் அனைவருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் முடிந்தளவு தமிழ் மாணவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அதிபர்/ பணிப்பாளர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார். அதிக எண்ணிக்கையான மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதால் புதன்கிழமை வரை நேர்முகப் பரீட்சைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## வடமராட்சியில்
# நெக்டெப் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியின் அபிவிருதிக்கென நெக்டெப் நிறுவனத்தினால் 6 திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 81 அபிவிருத்தித் திட்டங்களில் உடுத்துறையில் மேற்கொள்ளப்படவிருந்த இரண்டு திட்டங்களைத் தவிர்ந்த 79 அபிவிருத்தித் திட்டங்கள் உரிய காலத்தில் முடிவடைந்துள்ளது.

இதனால் 2009 ஆம்ஆண்டில் மேற்கொள்வதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டப் பணிப்பாளர் எஸ்.எம். குரூஸ் 6 புதிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இத்திட்டத்திற்கு அமைவாக 7 மில்லியன் ரூபா நிதியில் சிறுவர் பாடசாலை, மீனவர் கூட்டுறவுச் சங்க புனரமைப்பு, சனசமூக நிலைய கட்டடம், வாகனத் தரிப்பிடம், நீர் வழங்கல் சேவை, தடுப்புமதில் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இத் திட்டத்தின் உட்கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் பாவனைக்காக ஓகஸ்ட் மாதம் அளவில் கையளிக்கப்படவுள்ளதாக மாவட்ட திட்டப் பணிப்பாளர் கே. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட மூன்று கோட்டங்களைச்சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணக் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமையும், நல்லூர் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுநாள் வியாழக்கிழமையும், கோப்பாய் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சமுகமளிக்கும் ஆசிரியர்கள்,

- ◆ மாணவர்களின் விரபங்கள் (ஆண், பெண் ரீதியாக 2004,2005,2006, 2007 ஏனைய காலத்திற்குரிய தரவுகள்)
- ◆ ஆசிரியர் விபரம் (தகைமை, பயிற்சிகள் தொடர்பான விபரங்கள், சான்றுகள்)
- ◆ பாடசாலை விரபம் (பிள்ளைகள், ஆசிரியர்தள், கதிரைகள், மேசைகள் போன்றவற்றின் தரவுகள்)
- ◆ கட்டங்களின் விபரங்கள் (நீளம், அகலம், பரப்பு, விளையாட்டு மைதான பரப்பு, மலசல கூட வசதிகள்)

போன்ற தரவுகளை அன்றைய தினம் சமர்ப்பிக்க வேண்டும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## அன்னை வேளாங்கன்னி மாதா திருநாள்

(குருநகர்)

குருநகர் பதியில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய திருநாள் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மறை உரை, நற்கருணை ஆராதனையுடன், திருநாள் திருப்பலி அருட்திரு பாலதாஸ் பிராயன் அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (ஓ-39)

## சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின கொடி வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க வங்கியினரின் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின கொடி வாரத்தினை பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகூ நேற்றுக் காலை ஆரம்பித்து வைத்தார்.

முதலாம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வரும் இக் கொடி வாரத்தில் அங்கவீனர்கள், இடம்பெயர்ந்தோர், விதவைகள் போன்றோருக்கு வழங்குவதற்காக நிதி சேகரிப்பு என்பன இடம்பெறவுள்ளது என சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)




## நூலகரை நியமிக்க கோரிக்கை


(யாழ்ப்பாணம்)


நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் வாகீஸ்வரி பொதுசன நூலகத்திற்கு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பொதுநூலகங்களுக்கான வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளது.


இதனால் உசாத்துணைப் பகுதி, உடனுதவும் பகுதி என்பன செயற்படாமல் உள்ளன. வாசகர்களின் நலனைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான நூலகர் ஒருவரை நியமிக்குமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ஓ-36)











கோப்பாய் தெற்கு ஸ்ரீ வீரகாளி அம்பாள் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்புமலர் வெளியீடு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிகத் துறை பீடாதிபதி க.தேவராஜா நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும், வலி. வடக்கு பிரதேச செயலர் சி.மோகன்றாஸ், கோப்பாய் கிராமசேவகர் செ.செல்வச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவதையும், ஆலயகுரு சிவஸ்ரீ ரவீந்திரராசா நூலை வெளியிட்டு வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் -அலுவலக செய்தியாளர்)

# வறிய நாடுகளில் வறுமையைக் குறைப்பதற்கு கல்வியால் முடியுமா?

பல்வேறு நாடுகளில் வறுமையைக் குறைப்பதற்குரிய சிறந்த உபாயமாக குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதையும் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

கிழக்காசிய நாடுகள் 1950 களின் பிற்பகுதியில் விரைவான பொருளாதார விரிவாக்கத்தின் மூலம் வறுமையைக் குறைப்பதில் வெற்றிகண்டிருந்தார்கள். விவசாய உற்பத்தித்திறன் அதிகரித்தமை, வேலையின்மை கணிசமாகக் குறைந்தமை போன்ற காரணிகளுடன் இணைந்து கல்வி மட்டம் உயர்ந்தமையால் தான் வறுமைக்குறைப்பு சாத்தியமாயிருந்தது.

சீனாவிலும் கூட 1970 களிலிருந்து குடித்தொகையைக் குறைப்பதிலும், 1990 களில் வறுமையைக் குறைப்பதிலும் வெற்றி காண்பதற்கு கல்வியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காரணமாயிருந்தது.

இலங்கையிலும், கென்யாவிலும் கூட வறுமையைக் குறைப்பதிலும் சுகாதார நல வாழ்வை மேம்படுத்துவதிலும் கல்வி முன்னேற்றங்கள் பெரிதும் பங்களிப்புச் செய்திருந்தன.

இந்தியாவில் முற்றும் முழுதான வெற்றியைக் காணமுடியாத போதிலும் சிறந்த தரமான கல்வியை வழங்கிய பிரதேசங்களில் வறுமையைக் கணிசமாகக் குறைக்க முடிந்தது என்பது முக்கியமான தகவலாகும்.

வருமான ஏற்றத் தாழ்வைக் குறைப்பது வறுமையின் தீவிரத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளில் ஒன்றென பொருளியலாளர் கருதுகின்ற போதிலும் அதனைச் சாதிப்பதற்கு கல்வி முன்னேற்றங்கள் நிச்சயமாகத் துணைபுரிய வேண்டும்.

ஜப்பான், தென்கொரியா, தாய்வான் போன்ற நாடுகளில் வருமான ஏற்றத்தாழ்வைக் குறைப்பதில் நிலச் சீர்திருத்தங்களும், விவசாய உற்பத்தித் திறன் உயர்வும் பிரதான காரணிகளாக இருந்தபோதிலும் கல்வியும் முக்கிய பங்காற்றியமையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1950களின் பிற்பகுதியில் அசுர வளர்ச்சியைப் பெற்று முன்மாதிரியாக விளங்கிய "கிழக்காசியப் புலிகள்" என்று சிறப்பித்துக் கூறப்பட்ட கிழக் காசிய நாடுகளில் அத்தகைய வளர்ச்சிக்கு உந்து விசையாக விளங்கியவை கல்விப் பெறுபேறுகள் சமப்படுத்தப்பட்டமையும், சராசரிக் கல்வி மட்டம் அதிகரித்தமையுமாகும்.

ஹொங்கொங் மற்றும் குறிப்பாக சிங்கப்பூர் போன்ற நாடுகள் தம் கல்வி முறையில் பரவலாக -அகன்ற தெரிவுகளுக்கு வாய்ப்பளித்ததன் மூலம் வருமான இடைவெளியைக் குறைத்தனர்.

சீனாவில் வேறு அனுபவங்கள் வெளிப்பட்டன. மாவோவிச சீனாவில் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி வழங்குதல், வறுமையில் சமத்துவம் என்ற இரு நிலைமைகளும், வருமான சமத்துவத்தை கல்வி மூலம் ஏற்படுத்த முயன்று வெற்றிபெற்றன.

ஆனால் டென்சியா பெங்கின் காலத்தில் மேட்டுக் குடியினருக்குரிய மரபுகள் சீனக் கல்வியில் இடம்பிடித்தன.

பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சைகள் மீண்டும் அறிமுகமாகின. கடந்த இரு தசாப்த காலமாக நடைமுறையிலிருந்து வரும் சீனாவின் தாராள சீர்திருத்த அணுகுமுறையினால் தனியார் கல்விக்கு இடமளித்தல், பயனாளிகளிடம் கட்டணம் அறவிடல், பொது நிதியைப் பன்முகப்படுத்தல் என்பன அதிகரிக்கின்றன. இதனால் அங்கு பல மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களிடையில் கல்வியிலான சமமின்மை மோசமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவிலும் கல்வி -வறுமைத் தொடர்புகள் வேறுபட்ட காட்சிகளைத் தருகின்றன. நகர்ப்புறங்களில் வேகமாக வளரும் கைத்



தொழில்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்பு கொண்ட மேட்டுக் குடியினர் கல்வியினால் மிக உயர்ந்த வருமானம் பெறுகின்றனர்.

ஆனால் கிராமங்களில் வாழும் மக்கள் நிலச் சீர்திருத்தங்களினாலோ, உற்பத்தித்திறன் முன்னேற்றங்களையோ அனுபவிக்காமல் பிழைப்பூதிய வருமான மட்டத்தில் உழல்கின்றனர்.

மா.சின்னத்தம்பி M.A.M.Phil
சிரேஷ்ட கல்வி விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்


இந்த இரட்டைத் தோற்றத்திற்குக் காரணம் மிகவும் கூர்மையான கல்வி ஏற்றத்தாழ்வாகும்.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

71



இதைக் கேள்வியுற்ற குடியிருப்பாளர்கள் ஒபாமாவின் தலைமையில் அந்த முகாமையாளருடன் தொடர்புகொண்டனர். அவரின் பெயர் அன்டர்சன். கட்டடத்தைப் பழுது பார்ப்பதற்காக ஒரு சுவரை உடைத்த போது பைப்புகளில் அஸ்பஸ்ரோஸ் படிவங்களிருக்கக் காணப்பட்டன. அவைகளை அகற்றும் பணிகளில் தாங்கள் இப்போது ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக அவர் கூறினார். ஆகவே அதையிட்டு யாரும் கலவரமடைய வேண்டியதில்லை என்றும் ஆறுதல் கூறினார்.

"அப்படியானால் எங்களது ஏனைய மாடிக் கட்டடத் தொகுதிகளிலும் இந்த அஸ்பஸ்ரோஸ் ஆபத்து இருக்கத்தானே வேண்டும்?"

அன்டர்சன் அவர்கள் பொறியில் அகப்பட்டவராகி ஒபாமாவின் கண்களைப் பார்த்தார். மூடி மறைக்க எத்தனிப்பாராயின் அது பிரச்சினைக்கு விளம்பரமாகி விடும். ஒபாமாவின் காரியத்தை அது மிகவும் சுலபமாக்கும்.

அன்டர்சன் தப்பியிருக்கலாம். தான் இங்கு வருவதற்கு முன்பே அஸ்பஸ்ரோஸ் பிரச்சினை அங்கு இருந்திருக்க வேண்டும் என்று கூறியிருந்தாராயின், ஒபாமாவின் ஆட்கள் அவருக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒத்துழைப்புத் தந்திருப்பார்கள். அதை விடுத்து பெரிய பூசணிக்காயைச் சோற்றுக்குள் புதைக்க முயற்சித்தார்.

குடியிருப்பு வீடுகள் எதிலும் அஸ்பஸ்ரோஸ் அபாயமில்லை. இதுபற்றி நாங்கள் நன்றாக ஆய்வு மேற்கொண்டோம் என்று பொய் கூறினார்.

ஒபாமாவுடன் கூடியிருந்த குடியிருப்பாளருள் ஒருவர் திருமதி எவான்ஸ் அவர் இடைமறித்து அன்டர்சனைக் கேட்டார். "நீங்கள் மேற்கொண்ட ஆய்வு அறிக்கையின் பிரதியொன்றைத் தந்தால், நாங்கள் மற்றவர்களுக்கு காட்டி அவர்களுக்கிருக்கும் பயத்தைப் போக்க முடியும் என்றார்.

அன்டர்சன், " அவை நகரத்தின் கந்தோரில் கோவைப்படுத்தியுள்ளோம் இரண்டொரு வாரங்களில் எடுத்துத் தரலாம்" என்று சமாளித்து விட்டார்.

இரண்டு வாரங்களும் வந்து போயின. அன்டர்சனுக்கு தொலைபேசியில் அழைப்பு போட்டுப் பார்த்தும் பதில் எதுவுமில்லை. சிக்காகோ வீட்டு அதிகாரசபை, மாவட்ட முகாமையாளர், அதன் நிறைவேற்று அதிகாரி, நகர மேயர் என்றெல்லோருக்கும் கடிதங்கள் அனுப்பியாகிவிட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. இப்போது என்ன செய்வது?

ஒபாமா சிக்காகோ வீட்டு அதிகாரசபை தலைமை அலுவலகத்துக்குப் போகத் திட்டமிட்டார். முன்னதாக தங்கள் வருகைபற்றி நிறைவேற்று அதிகாரிக்குக் கடிதம் எழுதினார். இரண்டு நாளில் அவருடைய அலுவலகத்தில் தாங்கள் அங்கு தவறாது வருவதாகவும் அஸ்பஸ்ரோஸ் பற்றிய கேள்விகளுக்கு தங்களுக்கு உடன் பதில் தர வேண்டும் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு நில்லாது பத்திரிகைகளுக்கும் இச் செய்தியைக் கசியவிட்டார். கார்வர் பள்ளிக்கூடத்தின் அதிபர் டாக்டர் கொலியரின் அனுசரணையுடன் மாணவர்கள் மூலம் பெற்றோர்களுக்கும் அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. ஒவ்வொருவரும் தங்கள் அயலவர்களுக்கும் செய்திகளைப் பரப்பி பங்குகொள்ளுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். ஒபாமாவின் படைகள் குறிப்பிட்ட நாளில் பஸ் வண்டியில் ஏறி எல்லோரும் (CHA) சிக்காகோ வீட்டு அதிகார சபையின் அலுவலகத்தை நோக்கிப் படையெடுத்தனர்.

நான்காம் மாடியில் வரவேற்பாளரிடம் தாங்கள் வந்திருக்கும் செய்தியை இயக்குநருக்குத் தெரிவிக்கும்படி கூறினர். அவர் தற்போது அங்கு இல்லையென்று பதில் வந்தது. மேலும் CHA பற்றிய எந்த விடயமாக இருப்பினும் அல்ஜெல்ட்டில் உள்ள அலுவலகத்திலிருக்கும் அன்டர்சனிடம் தான் முறையிட வேண்டும். இங்கே அவர்கள் யாரையும் பற்றிப் பேச முடியாது என்று அடித்துக் கூறினார் வரவேற்பாளர்.

இவ்வாறு இழுபறிப்பட்டிருக்கும் போது ரெலிவிசன் கமராக்கள் சகிதம் பல செய்தியாளர்களின் ஒரு படையே உள்ளே புகுந்தது. உள்ளிருந்து வந்த இயக்குநரின் உதவியாளர் என்று தன்னைக் கூறிக்கொண்டே முன் வந்தார் திருமதி புரோட்னா, இயக்குநர் இங்கு இல்லாதபடியால், தயவுசெய்து உள்ளே வாருங்கள். உங்கள் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டலாம் என்றார்.

குடியிருப்பாளர்கள் தங்கள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வேண்டும் என்பதில் சற்றும் விட்டுக் கொடுக்காமலிருந்ததன் பலனாக, ஆய்வோ, ஆய்வறிக்கையோ எதுவும் நடக்காத சாக்குப் போக்குகள் என்பது பத்திரிகையாளருக்கும் மற்றவர்களுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டு, அந்த நடவடிக்கையாக வெகு விரைவில் கூட்டம் நடைபெறத் திகதி குறித்தும், அதன் முன் உண்மையான ஆய்வு நடத்த ஒழுங்குசெய்து கொண்டும், எல்லோரும் பஸ் வண்டியை நோக்கிப் புறப்பட்டனர்.

### ஜம்பொன்

ஒபாமாவுக்கு இந்த பஸ் பயணம் அவர் வாழ்வில் மாற்றம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதாவது அது "எதுவும் ஒருவனால் முடியும்" என்பதைச் சுட்டிக்காட்டி, ஆரவாரம், மகிழ்ச்சி, ஏமாற்றம் என்று எல்லாவற்றையும் தாண்டி அந்த ஒன்றை அடைய முண்டி உந்தித் தள்ளியது. பத்திரிகையாளர்கள் அன்று கமராவுடன் வந்து படம் எடுத்தது மிகவும் அவசியத் தேவையான விளம்பரத்தை ஏற்படுத்தியது.

(தொடரும்)

# கூட்டமைப்பினர் இந்தியத் தலைவர்களுடன் பேசுவதில் பயனில்லை; அரசுடன் பேசவேண்டும்

## அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் சிறந்த முடிவெடுப்பார்கள் என்கிறார் யாப்பா

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கை விவகாரம் தொடர்பில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி உட்பட இந்தியத் தலைவர்களுடன் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. யார் தீர்வு யோசனையை முன்வைத்தாலும் அதனை இலங்கையிலேயே அமுல்படுத்த வேண்டும்.எனவே அரசாங்கத்துடன் கூட்டமைப்பினர் பேச்சு நடத்த வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன தெரிவித்தார். எதிர்வரும் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் தமிழ்மக்கள் சிறந்த முடிவை எடுப்பார்கள். இந்தத் தீர்க்கமான கட்டத்திலாவது கூட்டமைப்பினர் பொறுப்புடன் நடந்துகொள்ளாமல் இருப்பது விசனத்திற்குரியதாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கை விவகாரம் தொடர்பில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறுகையில், பயங்கரவாதத்தைத் தோற்கடித்துள்ள அரசாங்கம் வடக்கு -கிழக்கை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். அத்துடன், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வையும் முன்வைக்கும். இது தொடர்பில் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

வவுனியாவில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதி மக்களுக்கு அரசாங்கம் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துகொடுத்துள்ளது.மேலும், அரசாங்கம் ஊடாக சர்வதேச சமூகம் உதவிகளை வழங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கின்றது. அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பு அரசாங்கத்துடனேயே பேச்சு நடத்த வேண்டும். அது தொடர்பில் பேசுவதற்கு நாங்கள் விடுத்த இரண்டு கோரிக்கைகளை கூட்டமைப்பு நிராகரித்தது.

அரசியல் தீர்வு தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் கூட்டமைப்பு பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.காரணம் எவ்வாறான தீர்வாக இருப்பினும் அது அமுல்படுத்தப்பட வேண்டியது இலங்கையிலாகும் என்றார்.(ஓ-6)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி மரணம்

கொழும்பு செட்டித்தெருவில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் படுகாயமடைந்து கொழும்புதேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின் அப்பலோ தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட விமலன் சற்குணராஜா (வயது 26) நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 1 மணியளவில் வீட்டிற்கு அருகாமையில் வைத்து ஆட்டோ ஒன்றில் வந்த இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுடப்பட்டு படுகாய மடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த இளைஞரின் தந்தைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளதாகவும், இவரது தந்தையார் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் உருவத்தை ஒத்தவர் எனவும், இவர் தற்போது இந்தியாவில் தங்கியுள்ளார் எனவும் பாதுகாப்புத் தரப்பினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளது என்று காவற்துறை ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட காவற்துறை அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்திருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. (ஓ-6)

# இனவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் தூண்டுபவர்கள் குறித்து விழிப்புடன் செயற்பட வேண்டும்

## ஐ.தே.க.எம்.பி தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு சில இனவாதிகளின் கருத்துக்கள், இலங்கையில் மேலும் ஒரு பிரிவினைவாதத்துக்கு வித்திட்டு வருகின்றன. இந்த பாரதூரமான விடயம் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஆரோக்கியமான நிர்வாகத்துக்கு எதிர்க் கட்சியின் விமர்சனம் அவசியமானது. நாட்டின் நலன் கருதிய எமது விமர்சனங்களை ஜீரணிக்க முடியாத அரச பங்காளிகள், ஐக்கிய தேசியக் கட்சி மீது சேறு பூசுவதன் மூலம் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர். இந்தக் கேவலமான அரசியல் தேவை தானா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

எதர்க்கட்சி அலுவலகத்தில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே தயாசிறி எம்.பி. இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தேசிய பிரச்சினையைக் கருத்திற்கொண்டே ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் யுத்தம் நிறைவுக்கு வந்திருப்பதால் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அரசுக்கு உதவ ஐ.தே.க. தயார் என எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதனை உதாசீனப்படுத்தும் வகையில் எம்மீதும் எமதுதலைவர் மீதும் சேறு பூசுகின்ற அரசியல் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. பணத்துக்காகவும் பதவிக்காகவும் நாம் பராளுமன்றம் வரவில்லை. எமக்கென்று நாட்டுப்பற்று ஒன்றுள்ளது. அதனை அரசாங்கத்திற்காகவோ அல்லது அரசில் ஒட்டிக் கொண்டிருக்கும் இனவாதிகளுக்காகவோ விட்டுக்கொடுக்க முடியாது.


அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட போது நாம் காலை வாருவதற்கு ஒருபோதும் நினைக்கவில்லை. யுத்தகள நிலைவரங்களை சர்வதேச நாடுகள் செய்மதி மூலம் தெரிந்துகொள்கின்றன. நாட்டைக் கட்டிக் கொடுக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை.நாட்டில் எதிர்க்கட்சி எதற்கு எனக் கேட்க விரும்புகிறேன். முன்னைய தலைவர்களின் வழிகாட்டுதலே இன்றைய பாரிய வெற்றிக்கு வித்திட்டுள்ளது.

ஆனால், ஜனாதிபதியைத் தவிர்ந்த முன்னைய தலைவர்கள் யுத்தத்திற்கு எதிராகச் செயற்பட்டதாகவும் நாட்டைப் பிரிப்பதற்கு முனைந்ததாகவும் கூறுகின்ற அமைச்சர் சம்பிக்க ரணவக்க,அந்தத் தலைவர்களை காலிமுகத்திடலில் நிறுத்தி கல்லெறிய வேண்டும் எனக் கூறுகின்றார்.

மறுபுறத்தில் சர்வகட்சிக் குழுவின் யோசனைகளை இழிவுபடுத்தியுள்ள விமல் வீரவன்ச எம்.பி., ஜனாதிபதியினால் சர்வ கட்சிக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை தரங்கெட்ட முறையில் விமர்சித்துள்ளார்.அரசியல் தீர்வுதேவையில்லை என்று கூறியுள்ளார்.அப்படியானால் இவ்வாறான இனவாதிகளை வைத்துக்கொண்டு அரசாங்கம் எவ்வாறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப் போகின்றது என்பது கேள்விக் குறியாகவுள்ளது என்றார். (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற தீவக கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு 22.05.2009

### புங்குடுதீவு மகா வித்தியாலயம்








### நெடுந்தீவு றோ.க. பெண்கள் வித்தியாலயம்



25.ஆயிரங்கள் 4 நூறுக்கள் 6 பத்துக்கள் 5 இவற்றைச் சேர்க்க வரும் எண்

1.5640 2.4651 3.4650 4.4650

இடை வெளிக்கு பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.
எமது பாடசாலையில் நடைபெற்ற கலை விழாவின் போது கல்வியின் சிறப்பு பற்றி நான் கவிதை ஒன்றை மேடையில்

26 ..............................................முன்னால் நின்று வாசித்தேன். அதை

27. ..............................................மூலம் மண்டபத்திலுள்ள அனைவரும் கேட்டனர் எனது நண்பன் அதனை

28..............................................ஒன்றில்

29.............................................. செய்து கொண்டான் அதனை பின்னர் அவன்

30..............................................நிலையத்திற்கு அனுப்பினான்.

(ஒலிவாங்கி , ஒலிபரப்பு, ஒலிநாடா, ஒலிபெருக்கி, ஒலிப்பதிவு)

31.75ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா.
1.பொன்விழா 2. வைரவிழா 3.பவளவிழா 4.வெள்ளிவிழா

ரகு, ரவி, ராதன், ராமன் ஆகிய நால்வரும் கடையொன்றில் வாங்கிய பொருட்களின் விபரம் வருமாறு

| பெயர் | வாங்கிய பொருட்கள் | விலை |
|---|---|---|
| ரகு | தேயிலை 250g சீனி 1kg | 60.00 |
| ரவி | பிஸ்கட்1kg கேக் 500g | 160.00 |
| ராதா | கேக் 1 kg | 100.00 |
| ராமன் | கேக் 500g சீனி 1kg | 90.00 |

இதனடிப்படையில் பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.


32. நான்கு பேரும் வாங்கிய பொருட்களின் மொத்தப் பெறுமானம் யாது
1.ரூபா310.00 2.ரூபா. 410.00 3.ரூபா 4. 420.00

33.750g சீனியின் விலை யாது?
1.ரூபா 30.00 2.ரூபா 45.00 3.ரூபா 60.00

34. 500g தேயிலையின் விலை யாது?
1.ரூபா 80.00 2.ரூபா 60.00 3.ரூபா 40.00

35.1kg கேக்கும்,1kg பிஸ்கட்டும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு
1.ரூபா 200.00 2.ரூபா 210.00 3. ரூபா 220.00

சாரங்கன் தனது உறவினரை அழைக்கும் விதம் தரப்பட்டுள்ளது.




36.சாரங்கனின் தந்தை பெயர் யாது?

37.சாரங்கன் திருமணமானவரா?

38.ராதாவின் பேரன் பெயர் என்ன?

39.ரவியின் தந்தை பெயர் என்ன?

40.சாரங்கனின் வீட்டில் எத்தனை பேர்?

# மாதிரி வினாத்தாள் 2
# வினாத்தாள் II இற்கான விடைகள்

I. 1.துன்பம் துயரம் 2. மக்கள் 3.அப்பா

4. உள்ளங்கள் 5.இரத்தம் 6.சாதி

7. அப்பா 8.தீமை 9.ஒண்ணாதார் 10.கண்ணீர்

II 1.முளையில் தெரியும் 2.தூற்றிக் கொள்

III 1.பத்திரிகை செய்திகளை வெளியிடுவதில் பிரதான இடம் வகிக்கின்றது 2.டெங்குக் காய்ச்சல் வைரஸ் கிருமியினால் தொற்றும் ஒரு நோயாகும்.

vi 1.நேற்று 2.விளையாட்டுமைதானம் 3.பச்சை

v 1.உங்களது பெயர் என்ன?

2.எனது பெயர் சாந்தி

vi 1.தேன்குருவி 2. பருந்து 3.கிளி 4. மரங்கொத்தி

vii 1.ஆமணக்கு 2.புளி 3.சதைகரைச்சான் 4.கண்டங்கத்திரி 5.கற்றாளை

8) 2 9) 1 10) 2 11) 1 12) 3 13)2 14)3 15) 4


16) 2 17) 2 18) 1 19) 3 20) 1 21) 3 22) 2 23) 2 24) 4 25) 2

26) 3 27) 1 28) 3 29) 2 30) 3 31) 1 32) 2 33) 2 34)2 35) 3

36) √

37)X 38)X 39) √ 40) √ 41)15:35 மணி 42)xxix 43)42cm 44) ரூபா 400.00

45) 25,815 46)9cm$^2$

47) 

48) 2 cm 49) 1.நான்முகி 2. 6 50) 3/6 = 1/2

கட்டுரை
பொருத்தமான ஆறு வசனம் எழுதுதல்

# தரம் –5 புலமை பரிசில் பரீட்சை– 2009


தயாரிப்பு: ஆரம்பக்கல்வி அலகு
கல்வி அபிவிருத்திப் பிரிவு
யாழ்ப்பாண கல்வி வலயம்

## மாதிரி வினாத்தாள் -3

நேரம் :-45 நிமிடங்கள்


வினாத்தாள் I

1. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாக பிரிக்கலாம்.




1. AD, BC  2. BD, AC  3. AB, CD

2. பின்வரும் உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




3. அருகில் உள்ள உபகரணத்தை பயன்படுத்துவோன்




1.தச்சன்  2.கொல்லன்  3.மேசன்

4. இடைவெளியில் வரவேண்டிய எழுத்துக்களை தெரிந்து கோடிடுக.

| | | |
|---|---|---|
| அ | த | க |
| | | |
| ல் | ம் | ரை |

1.வவதி  2. தி து ம்  3. னி வ து

5. கீழ் காணும் விடுபட்ட இடங்களை நிரப்புக.




6. அடைப்புக்குள் உள்ள பொருட்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்

| | | |
|---|---|---|
| A பணிஸ் | B அப்பிள் | C கரட் |
| D கோவா | E வாழை | F பிஸ்கட் |


இக் கூட்டங்களைச் சரியாக காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. BF | DE | AC
2. AF | DC | BE
3. AC | DF | BE

7. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட படங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிடுக.



1.சிறுவர்
2.விளையாட்டு
3.கடை

8. 

1.காலை
2.மாலை
3.வெளிச்சம்

9. சந்தை எனப்படுவது
 1.பொருட்கள் விற்கும் இடம்
 2.பொருட்கள் விற்று வாங்கும் இடம்
 3.பொருட்களை மக்களுக்கு காட்டும் இடம்

10. தாவரங்களிலிருந்து பெறப்பட முடியாதது பின்வருவனவற்றில் எது?
 1.இலுப்பெண்ணெய்  2. நெய்
 3.நல்லெண்ணெய்  4.வேப்பெண்ணெய்

11. நிலவு உச்சத்தில் உள்ள வேளையில் முற்றத்திற்கு வந்த வீமன்பறவை இன்று பறந்து போவதைக் கண்டான் அவன் கண்டது ஒரு.
 1.புறா  2.வௌவால்  3.பருந்து

பின்வரும் கோலத்தை கவனித்து இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

12. மேகம் ➔ மழை
 பசு ➔ பால்
 கடல் ➔ ................
 1.மீன்  2.நீலம்  3.அலை

13. புத்தகம் ➔ உறை
 தலை ➔ தொப்பி
 போத்தல் ➔ .............................
 1.பானம்  2. மூடி  3.காற்று

சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்

14. இலங்கையின் சகல பணத்தாள்களிலும் குறிக்கப்பட்டுள்ள சேமிப்பகம்.
 1.மக்கள் வங்கி  2.மத்திய வங்கி  3.இலங்கை வங்கி

மறைந்துள்ள சொல்லைக் கண்டு பிடியுங்கள்

15. முதல் எழுத்து சுவட்டிலிருக்கின்றது. சுவட்டிலில்லை
 இரண்டாம் எழுத்து பத்திலிருக்கின்றது பதவியிலில்லை
 மூன்றாம் எழுத்து திரியில் இருக்கின்றது நரியிலில்லை

16. படியிலிருக்கின்றது முடியிலில்லை
 தகட்டிலிருக்கின்றது பகட்டிலில்லை
 விறகிலிருக்கின்றது சுழகிலில்லை

17. "பெரியவரும் சிலவேளை தவறு விடலாம்" என்ற கருத்தை உணர்த்தும் பழமொழியைத் தெரிவு செய்க.
 1.பட்ட காலில் படும் கெட்ட குடியே கெடும்
 2.வேலியே பயிரை மேய்ந்தது
 3.ஆனைக்கும் அடி சறுக்கும்.

18. △ X + ○ 1 = 64 எனின் △ , ○ பெறுமதியாது?

 1.9,7  2.8,8  3.7.8  4.12,5

19. ஒருவர் பிறப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்ள செல்ல வேண்டிய இடம்
 1.வங்கி  2.அஞ்சல் அலுவலகம்
 3.மாவட்ட செயலகம்  4. பாடசாலை

தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய எழுத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.


 தட்பம் = 3412
 பட்டம் + தட்டம் = 4824

20. படம் என்பதன் பெறுமானம் யாது
 1.112  2. 195  3.145

21. தடம் + படம் இரண்டினதும் கூட்டுத்தொகை
 1.275  2. 424  3.725

22 அருகிலுள்ள சதுரத்தின் சுற்றளவு யாது?

10Cm



 1. 40Cm  2.100Cm
 3. 10 cm  4.40Cm²

23. புகையிரதம் புறப்பட கட்டுப்பாட்டாளர் காட்டும் சமிக்ஞை கொடியின் நிறம் யாது?
 1. சிவப்பு  2.கறுப்பு  3.பச்சை

24. வீதிகள் பழுதடையாமல் இருக்க வேண்டுமாயின்
 1.வாகனங்கள் பயணம் செய்யக்கூடாது
 2.அடிக்கடி திருத்தம் செய்ய வேண்டும்
 3.வீதி ஓரத்தால் பயணம் செய்ய வேண்டும்

# கச்சதீவில் முட்செடிகள் அகற்றும் பணியில் மீனவர்களை ஈடுபடுத்திய இலங்கை கடற்படை

(இராமேஸ்வரம்)

கச்சதீவில் முட்செடிகளை அகற்றும் பணியில் மீனவர்களை ஈடுபடுத்திய இலங்கைக் கடற்படையினர், அவர்களது படகுகளிலிருந்து பல இலட்சம் ரூபாய் இறால், மீன்களையும் பறித்துச் சென்றதாக தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசின் 45 நாள் மீன்பிடித் தடை முடிந்து இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த சனிக்கிழமை மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இந்தியக் கடல் எல்லை தாண்டிச் சென்ற படகுகளை கச்சதீவு அருகில் வழிமறித்த இலங்கைக் கடற்படையினர் படகுக்கு தலா ஒரு மீனவரை இறக்கிவிட்டு, மற்றவர்களை இலங்கைக் கடல்பகுதிக்குள் செல்ல அனுமதித்தனர்.

படகிலிருந்து இறக்கிய மீனவர்களை தங்களது படகில் அழைத்துச் சென்ற இலங்கைக் கடற்படையினர், கச்சதீவில் புதர் போல் மண்டியுள்ள முட்செடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தினர். இதன்பின் இவர்களை, நேற்று முன்தினம் காலையில் மீன்பிடித்து திரும்பிய இராமேஸ்வரம், பாம்பன் மற்றும் மண்டபத்தைச் சேர்ந்த படகுகளில் திருப்பி அனுப்பினர். இதனிடையே, "இலங்கை கடல் பகுதிக்குள் சென்று மீன்பிடித்து திரும்பிய படகுகளை வழிமறித்த கடற்படையினர் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இறால், மீன்களைப் பறித்துச் சென்றுள்ளனர்.

இதுகுறித்து மீன்பிடித்து கரை திரும்பிய இராமேஸ்வரம் மீனவர்கள் ராமு, அலெக்ஸ் ஆகியோர் தெரிவிக்கையில்,

கச்சதீவு கடல் பகுதியில் படகை நெருங்கிய இலங்கைக் கடற்படையினர் படகிலிருந்து அவர்களது படகுக்கு இறங்கச் சொன்னார்கள். அடிக்கத்தான் அழைக்கிறார்கள் என நினைத்தோம். ஆனால், எங்களை கச்சதீவில் இறக்கிவிட்டு ''கடற்படை முகாம்'' அமைக்கப் போகிறோம். அதனால், இதை சுத்தம் செய்யுங்கள் எனக் கூறினார். ஒவ்வொரு வாரமும் முட்செடிகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும் என்றும் கூறினர். (ஓ-6)

# ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி; குடும்ப அரசியலை நிலைநாட்டியுள்ளார் கருணாநிதி

## வைகோ தெரிவிப்பு



(கோவை)

" ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி வழங்கியதன் மூலம் , குடும்ப அரசியல் நடத்துவதை நிலை நாட்டியுள்ளார் முதல்வர் கருணாநிதி" என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

கோவையில் நடந்த திருமண விழாவில் பங்கேற்க வந்த வைகோ, நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இலங்கையில் போரை முன்னின்று நடத்தியது காங். கட்சிதான். ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் காங். துரோகம் செய்துள்ளது. 1.4 லட்சம் தமிழர்கள் பலியாக காரணமாக இருந்த இலங்கை அரசை , சர்வதேச நாடுகள் விசாரிக்க வேண்டும். தமிழகத்தின் துணை முதல்வர் பதவி ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டுள்ளது. காங்.கட்சியில் நேருவுக்குப் பின் இந்திரா, அவருக்குப் பின் ராஜிவ் பிரதமரான போது, "குடும்ப அரசியல்"என கேலி செய்த கருணாநிதி, இன்று தனது குடும்பத்தில் அதை நிலை நாட்டியுள்ளார். குடும்ப அரசியலை உற்றுக் கவனித்து வரும் தமிழர்கள், தக்க காலத்தில் இதற்கு பதிலளிப்பர் இவ்வாறு வைகோ கூறினார்.

ம.தி.மு.க வசம் உள்ள தொகுதிகளில் மீண்டும் இடைத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அத் தொகுதிகள் ம.தி.மு.கவுக்கு ஒதுக்கப்படுமா என்று கேட்டதற்கு, "இடைத் தேர்தல் பற்றி இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லை. கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்த சிலர் அவதூறு செய்திகளை பரப்பி வருகின்றனர். இதில் சிறிதும் உண்மை இல்லை. அ.தி.மு.க கூட்டணியில் தான் ம.தி.மு.க இன்னும் நீடிக்கிறது. எங்களைப் பிரிக்க நினைக்கும் கட்சிகளின் எண்ணம் நிறைவேறாது" என்றார். (ஓ-6)

# விஷயம் அறிந்து அதிகாரிகள் விழுந்து விழுந்து சிரிப்பு

(திருநெல்வேலி)

கொள்ளை தடுப்பு பொலிஸ்காரரை அரிவாளைக் காட்டி மிரட்டி அவரது மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்ற ருசிகர சம்பவம் நெல்லையில் நடந்துள்ளது. நெல்லை மாவட்டம் பெருமாள்புரம் குற்றப்பிரிவு பொலிஸில் உத்தியோகத்தராக இருப்பவர் ஜெயக்குமார். மாநகர பகுதியில் அடிக்கடி இரு சக்கர வாகனங்கள் திருட்டுப் போவதால் நேற்று முன்தினம் மாலையில் பெருமாள்புரம் நான்கு வழிச்சாலையில் தனியாக வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

குற்றப்பிரிவு பொலிசுக்கு அரசு வழங்கிய புதிய மோட்டார் சைக்கிளில் சென்றிருந்தவர் அந்த வண்டியை ரோட்டோரமாக நிறுத்திவிட்டு சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அந்த வழியாக ஒரு மோட்டார் சைக்கிளில் 3 பேர் வந்தனர். ஒரே வண்டியில் 3பேர் பயணிக்கலாமா என அறிவுரை சொல்வதற்காக பொலிஸ்காரர், ஜெயக்குமார் அந்த வண்டியை நிறுத்தினார்.வண்டியை நிறுத்தியவர்களோ மறைத்திருந்த நீண்ட அரிவாளை எடுத்து காண்பித்து மிரட்டினர். பொலிஸ்காரர் ஜெயக்குமார் செய்வதறியாது மிரண்டு போனார். இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்ட அந்த மூவரும் தாங்கள் செலுத்தி வந்த மோட்டார்சைக்கிளை அங்கேயே போட்டுவிட்டு ஜெயக்குமாரின் அரசு மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றுவிட்டனர்.

அவர்கள் விட்டுச் சென்ற மோட்டார் சைக்கிள் மதுரை மாவட்ட பதிவு எண்ணான டிஎன்.59 என்று மட்டும் உள்ளதே தவிர மேற்கொண்டு எண்கள் இல்லை.அது மிகவும் பழைய வண்டி.ஆனால் அவர்கள் செலுத்திச் சென்ற வாகனமோ பொலிஸாருக்கு வழங்கப்படும் புதிய சுசுகி அப்பாசி-சினிமா காமெடி பொலிஸ்காரர் வடிவேலு பாணியில் தமது வண்டியை பறிகொடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஜெய்க்குமார், அந்தப் பழைய சைக்கிளுடன் பெருமாள்புரம் பொலிஸ் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார். ஜெயக்குமார் நடந்த விஷயத்தை சக பொலிஸாரிடமும் உயர் அதிகாரிகளிடமும் கூறியபோது எப்.ஐ.ஆர், போடுவதற்கு பதிலாக எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். பாவம் மோட்டார் சைக்கிளை கண்டுபிடிப்பதற்காக டிஎன்.72-ஜி-885 என அரசாங்க பைக்கின் நம்பரை நேற்று முன்தினம் முழுவதும் நெல்லை மாநகர பொலிஸின் வயர்லெஸ் மைக்குகள் ஓயாமல் அலறிக்கொண்டே இருந்தன. நேற்று முன்தினம் இரவு வரை மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்க முடியவில்லை. (ஓ-6)

# இந்திய மாணவர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்தக்கோரி மெல்பேர்ன் நகரில் பேரணி

## வீதி மறியலில் ஈடுபட்ட 18 பேர் கைது

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியாவில் கடந்த சில வாரங்களாகவே இந்திய மாணவர்கள் மீது தொடர்ந்து இனவெறித் தாக்குதல் நடைபெற்று வருகிறது.

இந்திய மாணவர்கள் மீதான தாக்குதல்களை உடனடியாக தடுத்து நிறுத்தக் கோரி மெல்பேர்ன் நகரில் நேற்று முன்தினம் மாபெரும் பேரணி நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவில் உள்ள இந்திய மாணவர் கூட்டமைப்பு மற்றும் மாணவர் தேசிய யூனியன் ஆகிய அமைப்புகள் சார்பாக பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. விக்டோரியா மாகாண சட்டசபை கட்டிடம் நோக்கி சென்ற அமைதிப் பேரணியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்த போது திடீரென தெருவில் அமர்ந்து மறியலிலும் ஈடுபட்டனர். இதனால் அமைதியை சீர்குலைத்ததாக அவுஸ்திரேலிய பொலிஸார் மாணவர்கள் மீது வழக்குப் பதிவு செய்தனர். அவர்களில் 18 பேரை கைது செய்தனர். மாணவர்கள் கைது செய்யப்பட்டதற்கு போராட்டக் குழுவினர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# கொழும்பு ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து கனடாவில் இலங்கை தூதரகம் முன்பு போராட்டம்

(ரொறன்ரோ)

இலங்கையில் உள்ள கனடா நாட்டு தூதரகத்தின் முன்பு சிங்களவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தினைக் கண்டித்து கனடாவில் உள்ள இலங்கை துணைத்தூதரகம் முன்பு தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொழும்பில் உள்ள கனடா தூதரகத்தின் முன்பாக கடந்த புதன்கிழமை அன்று பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இதில் கனடா அரசாங்கம் விடுதலைப்புலிகளை ஆதரிக்கின்றது என்று குற்றச்சாட்டை முன்வைத்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கைப் பிரச்சினையில் கனடா தலையிடுவதைக் கண்டித்தும், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்காக குரல் எழுப்ப கனடா அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என வலியுறுத்தியும் இப் போராட்டம் நடத்தப்பட்டது.

இச் செயலைக் கண்டித்து கனடாவின் ரொறன்ரோ நகரில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் முன்பாக தமிழர்கள் போராட்டம் நடத்தினர்.

இதில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள், கனடாவுக்கு ஆதரவாக கனடிய தேசியக் கொடிகளைத் தாங்கியவாறு சிங்களவர்களுக்கு எதிராக முழக்கம் எழுப்பி போராட்டம் நடத்தினர். (ஓ-6)

# சீனாவில் சுரங்க விபத்தில் 30 பேர் பலி;110 பேர் காயம்


(பீஜிங்)

சீனாவில் உள்ள ஜாங்சிங் என்ற இடத்தில் நிலக்கரி சுரங்கம் ஒன்று உள்ளது.

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி 30 பேர் உயிர் இழந்தனர். 110 பேர் காயம் அடைந்தனர்.

காஸ் கசிந்து இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது. (ஓ-6)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி

அமரர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் கல்விச் சமூகத்தினருக்கும் பொருளியல் துறை மாணவர்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பொருளியல்துறை மாணவர்கள்,
இளம் பொருளியலாளர் மன்றம்,
பொருளியல்துறை, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(2797)

## கண்ணீர் அஞ்சலி




அமரர் பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா

அமரர் பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா (பீடாதிபதி கலைப்பீடம்) அவர்களினுடைய மறைவில் துயருற்றிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தோடு அதன் ஒரு அங்கமாகிய முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் தன் துயரைப் பகிர்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பீடாதிபதி, விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்.

(C/2524)

# பெண்களை தாக்கும் குடலிறக்க நோய்



**ஹே**ர்னியாவை குடலிறக்கம் என்பார்கள். பலவீனமான வயிற்றுச் சுவர்ப் பகுதியை நோக்கி மற்ற இடத்திலிருந்து குடல் சரிந்து விடுவதுதான் ஹேர்னியா. உதரவிதானத்திலிருந்து வயிற்றின் அனைத்துப் பகுதிகளிலும் இந்தப் பாதிப்பு வருகிறது. இந்த நிலையில் பாதிக்கப்படட பகுதி பிதுக்கமாகக் காணப்படும்.

இடுப்பின் அரைப் பகுதியில் தான் ஹேர்னியா அதிகளவில் வருகிறது. இதை பெமோரல் ஹேர்னியா என்கிறார்கள். தொப்புள் பக்கதில் வருவது அம்பிளிக்கல் ஹேர்னியா.

வயிற்றின் மேல் பகுதியில் இரைப்பையும் உணவுக்குழாயும் சந்திக்கும் இடத்தில் கூட ஹேர்னியா வரும். இதற்கு எபிகாஸ்டரிக் ஹேர்னியா என்று பெயர்.

இந்த இடத்தில் ஹேர் னியா வந்தால் பிதுக்கம் வெளியே தெரி யாது. யார் யாருக்கு வரலாம்?

ஆண் – பெண் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம் என்றாலும், ஆண்களை விட பெண்களுக்கு அதிகமாக வருகிறது. குழந்தைப் பருவத்திலும் வரும், முதிய வயதிலும் வரும்.

அதிகமாக பாரம் தூக்கி வேலை செய்பவர்களுக்கு ஹேர்னியா அதிகளவில் வருகிறது. கர்ப்பக் காலத்தில் ஹேர்னியா வந்தால் கருவுக்கு கூடுதல் சிக்கலைக் கொடுக்கும்.

மார்புக்கும் வயிற்றுக்கும் இடையிலுள்ள தசைப் பகுதியில் வலி எடுக்கும். ஆண்களுக்கு விதைப்பையுள்ள பகுதியை நோக்கி குடல் சரிந்து ஹேர்னியா வரக்கூடும்.

பிரசவம், கர்ப்பப்பை நீக்குதல் போன்ற கட்டாயத்தினால் அடி வயிற்றில் சதையும், கொழுப்பும் சேரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னர் குனிந்து நிமிர்ந்து கடுமையான வேலைகளைச் செய்யும் போது வயிற்றின் முன்புறப் பகுதி வீங்கி, நகர்ந்து வயிற்றின் மிகவும் நெகிழ்வுப் பகுதியான தொப்புள் அருகே வந்து விடுகிறது. உடல் கனம் அதிகரிக்கும் போது தொப்பையும் கூடுதலாகிறது.

அறுவைச் சிகிச்சை செய்த இடத்தில் தசைகள் போதுமான அளவு ஆறாவிட்டால் ஹேர்னியா வந்து விடும். இதை இன்சிஷனல் ஹேர்னியா என்கிறார்கள்.

### இன்சிஷனல் ஹேர்னியா

அடிவயிற்றுத் தசையும், கொழுப்பும் மட்டும் நகர்ந்து வெளியே தள்ளப்படும் போது வலியும், அசௌகரியமும் மட்டும் தோன்றும். இதேபோல் சிறுகுடல் வெளித் தள்ளப்பட்டால் உயிருக்கு ஆபத்தாக முடியலாம்.

குடல்களில் சிறு குடல் மட்டும் நகரக்கூடிய பகுதி. இது நகர்ந்து வெளியே வரத் தொடங்கி விட்டால் உணவு செல்ல முடியாமல் தடை ஏற்படும். உடலிலுள்ள வாயுவும், காற்றும் வெளியே செல்ல முடியாது. வாந்தி, வயிற்றில் வலி போன்றவை எடுக்கும். வாந்தி தவறுதலாக மூச்சுக் குழலுக்குச் சென்றால் உயிருக்கு ஆபத்தாக முடியும். சிறு குடலுக்குச் செல்லும் இரத்தப் போக்கு கட்டுப் படுத்தப்



படுவதால் உயிருக்கு ஆபத்தாகவும் முடியும்.

### அறிகுறிகள்

ஹேர்னியா அறிகுறிகள் வெளியே தெரிவதற்குள் அது கூடுதலாக வளர்ந்து விடுகிறது. ஹேர்னியா வந்தால் குடல் பிதுக்கம் இருக்கும். இருமும் போதும், தும்மும் போதும், விக்கும் போதும் கடுமையாக வலியெடுக்கும்.

இரைப்பை உணவுக் குழல் பகுதியில் ஹேர்னியா இருந்தால் இரைப்பை அமிலம் கட்டுப்பாடின்றி மேலெழுந்து வந்து உணவுக் குழாயை அரித்து புண்ணாக்கும்.

இரைப்பைக் குழாய் வழியாக சாப்பிடும் உணவு உள்ளே செல்லும். ஆனால் இந்த இடத்தில் ஹேர்னியா இருக்கும் போது, கட்டுப்பாட்டை மீறி வயிற்று அமிலங்கள் மேலே வருவதால் நெஞ்சு எரிச்சல், வாந்தி போன்றவை வரும். கவிழ்ந்து படுத்தாலும் இதே பிரச்சினை உண்டாகும்.


நீண்ட காலம் இந்த பிரச்சினை நீடித்தால் உணவுக் குழாய் குறுகலாகி விடும். இரத்த ஓட்டமும் பாதிக்கப்பட்டு குடல் முறுக்கம் ஏற்படும். பெரிடோனியம் பகுதியிலுள்ள பைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடுக்கப் படுவதால் அப் பகுயிலுள்ள இரத்த நாளங்கள் வீங்குகின்றன. நாளடைவில் இரத்த ஓட்டம் பாயாத சிறுகுடல் நீலமாகி அழுகி விடும். இதனால் குடல் முறுக்கமும், உயிருக்கு ஆபத்தும் ஏற்படும்.

குடல் முறுக்கம் ஏற்பட்டால் நோயாளிக்கு மல அடைப்பு, வாந்தி, மலச்சிக்கல், வயிற்று வலி, குடல் பகுதியில் உப்புசம் போன்ற தொல்லைகள் இருக்கும். சிறுநீர் கழிக்கவும் சிரமம் உண்டாகும்.

### சிகிச்சை முறை

நோயாளிக்கு வேறு விதமான நோய்கள் சர்க்கரை, மிகை இரத்த அழுத்தம் ஆகியவை இருக்கிறதா என்பதைப் பார்த்து அதன் பிறகே அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இப்போது லாப்ராஸ் கோப் முறையில் எளிதாக இந்த அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

# தூங்காமல் வேலை செய்வோரே...



பரபரப்பான வாழ்க்கை முறை காரணமாக இப்போதெல்லாம் இரவில் தூங்காமல் அதிகாலை வரை வேலை பார்ப்பவர்கள் உண்டு. இது தோல் உட்பட உடல் நலனுக்கு எந்த வகையிலும் நல்லது அல்ல.

இளமையுடன் உற்சாகமாகச் செயல்பட ஓய்வு மிகவும் அவசியம். தூக்கம் மூலம் உடலுக்கு போதுமான ஓய்வைத் தொடர்ந்து கொடுத்தால் தான் முதுமை தோற்றத்தைத் தள்ளிப்போட முடியும்.

முன் இரவில் ஒரு -மணிநேரம் தூங்குவது என்பது, நள்ளிரவு 12 மணிக்கு மேல் இரண்டு மணி நேரம் தூங்குவதற்குச் சமம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

# கண்களின் நலன் காக்க

♦ கரட்டில் விற்றமின் ஏ சத்து அதிகம் உள்ளதால், பார்வைத் திறனைப் பாதுகாக்கும் சக்தி அதற்கு உண்டு. ஆனால், கரட் சாப்பிடுவதன் மூலம் இழந்த பார்வைத் திறனை மேம்படுத்த முடியாது.



♦ தொலைக்காட்சிக்கு அருகில் உட்கார்ந்து பார்க்காதீர்கள். உங்கள் தொலைக் காட்சியின் செங்குத்தான உயர அளவு 10 அங்குலம் இருந்தால், நீங்கள் 10 அடி தொலைவிலிருந்து டி.வி. பாருங்கள்.

♦ மங்கலான வெளிச்சத்தில் புத்தகங்களைப் படிக்காமல் பின்புறத்திலிருந்து விளக்கின் வெளிச்சம் பிரகாசமாக புத்தகத்தின் மீது விழும் நிலையில் படிப்பது எளிதாக இருக்கும்.

♦ குழந்தைகளுக்கு மாறு கண் தானாகவே சரியாகாது. அது அதிர்ஷடமும் அல்ல. ஆரம்ப நிலையிலேயே முறையான சிகிச்சை, பயிற்சி தேவை. அலட்சியமாக இருந்தால் பார்வை பறிபோய் விடும்.

♦ இறந்தவர்களின் கண் தானமாகக் கிடைத்த பிறகு, தேவைப்படுவோருக்கு முழு கண்ணும் மாற்றுச் சிகிச்சை செய்யப்படுவதில்லை. மாறாக, தானமாகப் பெற்ற கண்ணில் உள்ள விழி வெண்டபலம் (கார்னியா) மட்டுமே மாற்றுச் சிகிச்சையில் பொருத்தப்படுகிறது.

# பித்த வெடிப்பு மறைய என்ன செய்யலாம்?






**உ**ள்ளங்காலின் வெளிப்புற அமைப்பு கனத்த தசை போர்வையின் பேரில் அமைந்த தடித்த தோல் விரிப்பு கொண்டது. உடல் கனத்தை தாங்க வேண்டி இருப்பதால் கால் எலும்புகளின் அடிப்பகுதியில் உள்ள தசை பகுதி குஷன் போல் உதவுகிறது. கடுமையான சூடு, ஈரம், மேடு, பள்ளம் இவைகளைத் தாங்கும் சக்தி பெற்றுள்ளது.

உழைக்கும் உள்ளங்கால்கள் தன்னை சீரமைத்துக்கொள்ளவும் வலிமைபெறவும் நம்மிடமிருந்து சிறிய உதவியினை எதிர் பார்க்கின்றன.

தினமும் உள்ளங்காலில் நல்லெண்ணெய்யோ அல்லது விளக்கெண்ணெயோ குளிப்பதற்கு முன் தடவித் தேய்த்து விட வேண்டும்.

இதை விட முக்கியமானது இரவில் படுக்கும் முன் கால்களை நன்கு தேய்த்து அலம்பி விட்டு துடைத்து அதன் தசை இறுக்கம் நீங்கும் வகையில் லேசாக எண்ணெய் தடவி தேய்த்து விட வேண்டும்.

முடிந்தால் இரவில் வெதுவெதுப்பான தண்ணீர் கொண்டு கால் அலம்புவது நல்லது. கால் தசை இறுக்கம் தளர்வதால் அயர்ந்து நிம்மதியாக தூங்க முடியும். இது கால்களில் வெடிப்பு வராமல் பாதுகாக்க உதவும்.

உள்ளங்கால்களில் வரட்சி மிகும் போது தோல் வரண்டு அதிகம் தடிக்கும். அப்போது வெளிவிரிப்பு வரை இரத்த ஓட்டம் வருவது நின்று அந்த விரிப்பு உணர்வற்று சுருங்கி விடும்.

மேல் தோல் தடிக்க அதில் விரிந்து சுருங்கும் தன்மை குறைவதால் உடல் அழுத்தம் தாளாமல் பாளம் பாளமாக வெடிக்கும். உடல் சூடு அதிகமாக உள்ளவர்களுக்கு உள்ளங்கால் தோல் வெந்து வெடித்து வெடிப்பிலிருந்து ஊன்–இரத்தக் கசிவும் கடுமையான வலியும் ஏற்படக்கூடும். சிலர் அரிப்பு மிகுந்து காலைத் தேய்த்து புண்ணாக்கி கொள்வர்.

தோல் தடித்து வெடிப்பு ஏற்படும் போது தோலில் வெளிப்புறம் வரை இரத்த ஓட்டம் ஏற்படும்படி தினமும் சாதம் வடித்த கஞ்சியை சுட வைத்து தேய்த்துவிட்டு சூடான தண்ணீரில் இதமாக சிறிது நேரம் காலை கழுவித் துடைத்து விடலாம்.

கஞ்சி வடிக்கும் பழக்கத்தை மறந்து விட்ட இந்த நாள்களில் அரிசி மாவை கொதிக்க வைத்து கஞ்சி பதத்தில் இறக்கி தேய்த்துக் கெள்ளலாம்.

இதை தினமும் இரு முறை செய்ய சில நாட்களில் காலின் வெளிப்புற தோல் பரப்பு வரை இரத்த ஓட்டம் ஏற்பட்டு வெடிப்பு மறையும்.

வெடிப்பும் அதனல் ஏற்பட்ட கருமை நிற வடுக்களும் மறைய 'ஜீவன்ந்தி யாதி யமகம்' எனும் எண்ணெயை பயன்படுத்தலாம். இரவில் கால்களை நன்கு கழுவிச் சுத்தம் செய்த பிறகு இந்த எண்ணெயை வடுக்கள் உள்ள பகுதிகளில் தேய்த்து விட வேண்டும். பகல் நேரங்களில் நேரம் கிடைக்கும் போது 'சிந்து ராதி லேபம்' எனும் களிம்பை வடுக்கள் மீது தேய்க்கலாம்.

உள் மருந்தாக 'கதிராரிஷ்டம்' 30 மில்லி அளவு காலை, இரவு உணவிற்கு பிறகு சாப்பிடலாம். இதுவும் அநேகமாக இந் நாட்டில் கிடைப்பது கஷ்டமானது. எனவே இந்த மருந்து வகைகளை இந்தியாவில் இருந்து தருவித்துக் கொள்ளலாம்.

பிச்சைக்காரனுக்கு நீ ஒன்றும் போடவில்லையாயினும், அவன் பையைக் கிழிக்காமல் விட்டால் போதும்.

~ அயர்லாந்து

வலம்புரி

## ஐ.நா. செயலர் பான் கீ மூன் பதவியை இராஜினாமாச் செய்வாரா?

இலங்கை விவகாரத்தால் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் இல்லை என ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் தெரிவித்திருந்தார்.

ஐ.நா. சபையின் செயலாளர் விடுத்த மேற்போந்த கருத்து அவரின் நடுநிலைத் தன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் – வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் இருபதாயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக பிரிட்டனிலிருந்து வெளிவரும் த ரைம்ஸ் பத்திரிகை தகவலை வெளியிட்டது.

இதனால் ஐ.நா. சபை உட்பட சர்வதேச சமூகம் அதிர்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக ஐ.நா. செயலாளர் இது தொடர்பில் குழம்பிப்போயுள்ளார்.

ரைம்ஸ் பத்திரிகையின் தகவலுக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஐ.நா. சபை ஆளாகியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், வன்னி யுத்தத்தில் இருபதாயிரம் பேர் உயிரிழந்த தகவல் ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கு தெரியும் என ரைம்ஸ் பத்திரிகை மற்றுமோர் தகவலை வெளியிட்டுள்ளமை ஐ.நா. சபையின் கௌரவத்தை படுகுழிக்குள் புதைத்துள்ளதுடன் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் பொய்யுரைத்துள்ளார் என்ற செய்தியையும் உலகறியச் செய்துள்ளது.

வன்னியில் நடந்த யுத்தத்தில் இருபதாயிரம் பொதுமக்கள் உயிரிழந்த தகவல் தெரிந்திருந்தும் ஐ.நா. செயலாளர் எதற்காக மறைத்தார்?

பொதுமக்களின் இழப்பு –இறப்பு தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய ஐ.நா. செயலாளர் இலங்கையில் இருபதாயிரம் தமிழ் மக்கள் இறந்த செய்தியை இருட்டடிப்பு செய்தது ஏன்? என்ற கேள்விகள் சர்வதேசம் முழுவதிலும் வியாபகம் பெற்றுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. சபையின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் அதன் செயலாளர் பான் கீ மூன் தனது பதவியை இராஜினாமாச் செய்வதே பொருத்தம்.

அதனை அவர் செய்வாரா இல்லையா என்பதை காலமே தீர்க்க வேண்டும்.

ஆனால் ஐ.நா. சபை எதிர்காலத்திலும் இயங்கவேண்டுமாயின், அந்த அமைப்பிற்கு சர்வதேச மதிப்பு இருக்கவேண்டுமாயின் இலங்கைத் தமிழர் விடயத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட பான் கீ மூன் ஐ.நா. செயலர் பதவிக்குத் தான் பொருத்தமற்றவர் என்பதை உணர்ந்து கொண்டு பதவியை இராஜினாமாச் செய்வதே சாலச்சிறப்புடையதாகும்.

# 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்த தயார்

## மேலதிக அதிகாரங்களுக்கு அரசியலமைப்பில் மாற்றம் தேவை

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் படுத்தப்பட வேண்டுமென ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

தேசிய பாடசாலைகள் மற்றும் தேசிய வைத்தியசாலைகள் இல்லாமல் செய்யப்பட்டு மாகாண ரீதியில் அதிகாரங்கள் பகிரப்பட்டு அவை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற பிரேரணையொன்றையும் அந்தக் குழு அரசாங்கத்திடம் முன்வைக்கவுள்ளது.

இந்தப் பிரேரணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்க முன்னர், எதிர்வரும் புதன்கிழமை கூடி அது குறித்து ஆராய்வதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

மாகாண சபைகளில் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதையே அரசாங்கத்திடம் தாம் பரிந்துரைக்கவுள்ளதாக அக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எமது பிரேரணைக்கு அமைய தேசிய பாடசாலைகளோ அல்லது தேசிய வைத்தியசாலைகளோ இருக்கக்கூடாது. இவை மாகாண சபைகளாலேயே கையாளப்பட வேண்டும்.

ஆனாலும் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள் பற்றிய கொள்கைகள் மத்திய அர சாங்கத்தாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். அவற்றை மாகாண சபைகள் நிறைவேற்ற வேண்டும் என்பதே தமது பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அந்த அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேநேரம், மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டளவில், அசம்பாவிதங்களைக் கண்காணிக்கும் அளவிற்கு அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்க வேண்டும் என்பதே அக்குழுவின் நிலைப் பாடு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான டிலான் பெரேரா, டியூ. குணசேகர, ராஜித சேனாரட்ன, டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவ நேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இதேவேளை, 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் அமுல்படுத்த அரசாங்கம் தயாராகவிருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது எமது அரசியலமைப்பின் ஒரு பகுதி. எனவே எந்தப் பிரச்சனையுமின்றி அதனை அமுல்படுத்த முடியும். அதற்கும் மேலதிக மாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமாயின் அது அரசியலமைப்பு மாற்றத்தின் மூலமே ஏற்படுத்த முடியும். எனவே, அரசியலமைப்பு மாற்றமொன்றைச் செய்வதே ஆலோசனைக்குரியது என்றார் அமைச்சர். (ஓ-6)

# வவுனியா செல்வதற்கே அனுமதி மறுக்கும் அரசு வடபகுதி தேர்தலில் பங்கேற்க இடமளிக்குமா?

## ஐ.தே.க கேள்வி

(கொழும்பு)

வவுனியா செல்வதற்கே எதிர்க் கட்சியினருக்கு அனுமதி மறுத்துள்ள அரசாங்கம், வடக்கின் தேர்தல்களில் பங்கு கொள்ள இடமளிக்குமா என்பது சந்தேகமாகவுள்ளது. இது ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி விசனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற தனியொரு கட்சிக்காகவே தேர்தல் நடைபெறப்போகின்றதோ என்ற சந்தேகம் பரவலாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் அரசாங்கம் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியது கட்டாயமானது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இங்கு மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத்தை முறியடித்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் தற்போது வடக்கில் தேர்தல்களை நடத்துவதற்கும் அரசாங்கம் தயாராகி வருகின்றது.

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்கு சுதந்திரம் இருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் நாட்டின் எப்பாகத்திலும் போட்டியிட முடியும்.

ஆனால், தற்போதைய நிலைமைகளில் சூழ்ச்சிகளின் அடிப்படையில் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சந்திப்பதற்கும் வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளர்களைப் பார்ப்பதற்கும் கூட எமக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சிடம் பலமுறை கோரிக்கை விட்ட பொழுதிலும் துரதிஷ்டவசமாக இதுவரையில் எமக்கான அனுமதிகள் மறுக்கப்பட்டே வருகின்றன.

இப்படியான நிலைமைகளிலேயே அரசாங்கம் வடக்கின் தேர்தல்களை அறிவித்துள்ளது. அப்படியானால் வவுனியா செல்வதற்கே அனுமதி மறுக்கின்ற அரசாங்கம் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நாம் ஜனநாயகத்தையும் அதன் உரிமைகளையும் மதிக்கின்றோம். ஆனால், அரசாங்கம் அப்படி நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. இது ஜனநாயத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகவே கருதப்படுகின்றது என்று தெரிவித்தார். (ஓ-6)

## ஈழப் போராட்டம் குறித்த திரைப்படத்தை இயக்கும் முயற்சியில் பாரதிராஜா

ஈழப் போராட்டத்தின் முப்பதாண்டுகால ஆயுதப் போராட்டத்தின் கசப்பான முடிவு பாரதிராஜாவை கடுமையாகப் பாதித்திருக்கிறது. அவர் விரைவில் ஈழ மக்களின் தமிழீழக் கோரிக்கை குறித்த தமிழ் சினிமா ஒன்றை இயக்கப் போகிறார்.

முப்பதாண்டுகால ஆயுதப் போரில் பிரபாகரனின் பங்கும், போராளிகளின் விடுதலை வேட்கையையும் எடுத்துச் சொல்லும் வகையில் அமையப் போகும் இந்தப் படத்தின் திரைக்கதை முடியும் தருவாயில் இருக்கிறது.

முழுக்க முழுக்க புது முகங்களே நடிக்கும் இந்தப் படத்தில் புலிகளின் பகுதியையே மையமாக வைத்து கதையை் நகர்த்தப் போகிறார்.

அத்தோடு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஈழ மக்களுக்கு செய்த துரோகத்ததையும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொன்றொழிக்கப்பட இந்தியா எவ்வாறு காரணமாக இருந்தது என்பதனையும், சமகாலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த இனப் போராட்டத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் விதத்தில் இந்த திரைப்படம் அமையும் என்றும் தெரிவித்துள்ளார் இயக்குநர் பாரதிராஜா.

(ஓ-6)

## யாழ். குடாநாட்டு மக்களுக்கான புதிய நீர்வழங்கல் திட்டம்

யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்கான குடிநீரை விநியோகிக்கும் பொருட்டு புதிய நீர்வழங்கல் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்காக இரணைமடு நீர்த்தேக்கத்தை பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். இந்த செயற்திட்டத்திற்கு 610 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள குடியேற்ற உள்ளமையால் நீர்வழங்கல் திட்டங்களை துரிதப்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார். (ஓ-4)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு தியாகம்



பெரிய செயல்களைப் பெருந்தியாகத்தால் மட்டுமே செய்ய முடியும். உலகப் பொதுவான தன்மை என்னும் அந்த ஒரே கருத்திற்காக, தேவையானால் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும்.

பிறருக்கு முக்தியை வழங்குவதற்காக நீ நரகத்திற்குச் செல். என்னுடைய சொந்த முக்தியென ஒன்றும் இங்கு இல்லை.

பிறர்க்கென எல்லாவற்றையும் தியாகம் செய்பவனுக்கே முக்தி கிடைக்கும். "எனது முக்தி எனது முக்தி" என ஓயாது பல்லவி பாடி, இரவும் பகலும் தம் மூளையை அலுக்கச் செய்யும் பிறரோ தற்கால உண்மை நன்மையையும் பிற்கால முன்னேற்றத்தையும் அழித்தவாறே அங்கும் இங்கும் அலைவர்; பலமுறை இதை நான் கண்டதுண்டு.







# யாழ். வண்ணை கலட்டி
# எச்சாட்டி மஹாமாரியம்பாள் தேவஸ்தான
## புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ
# மஹா கும்பாபிஷேக பெருவிழா
## 05-06-2009 வைகாசி சுவாதி திருநாள்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவி அடங்க காத்தாளை
அங்குசபாசாங்குசமும் கரும்பும் அங்கை சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

**அம்பிகை அடியார்களே!**

இந்து மகா சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் ஈழமணித் திருநாட்டின் யாழ் நகரின் வடபால் சைவமும், தமிழும் கமழும் வண்ணார்பண்ணை கலட்டி நகர வேப்பமரச்சோலை தனில பன்னெடுங்காலமாக அருள் பிரவாகம் நிறைந்து அனுக்கிரக நாயகியாக விளங்கும் ஸ்ரீ மகாமாரி அம்பாளுக்கு நிகழும் விரோதி வருஷ வைகாசி மாதம் 22 ஆம் நாள் (05-06-2009) வெள்ளிவாரமும், திரயோதசித் திதியும், சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும், குருவோரையும், கவுல்வ கரணமும் கூடிய காலை 6.40 மணிமுதல் 6.52 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் துணைகூட்டி இருப்பதால் பக்தப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து அன்னையின் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா கிரியா காலங்களில் தரிசனம் செய்து அம்பிகையின் திருக்கருணையைப் பெறுவோமாக.

## கிரியாகால நிகழ்வுகள்

**வைகாசி 18 ஆம் நாள் (02-06-2009) திங்கட்கிழமை** பின்னிரவு (செவ்வாய் அதிகாலை) 4.55 மணியளவில் ஐந்து புண்ணிய ஷேத்திரங்களில் (ஆலயங்கள்) இருந்து கொண்டு வரப்பட்ட புண்ணிய கங்காதீர்த்தங்களுடன் கலட்டி கற்பக விநாயகர் தேவஸ்தானத்தில் இருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம், ஆசாரிய பெருந்தகைகள் தேவஸ்தானத்திற்கு அழைத்து வரப்பட்டு ஆசார்ய வர்ணம், விநாயக வழிபாடு, அனுஞ்ஞை, திரவியசுத்தி, திரவியவிபாகம், பிரதிஷ்டா சங்கல்பம், கணபதிஹோமம், நவக்கிரகமகம், கிராமசாந்தி, பேரீதாடனம், பிரவேசபலி, ரஹோக்னஹோமம், திஷாஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், கங்காபூஜை, ஆதித்தியாக்கினி சங்கிரகணம்.

மாலை 3.30 மணிமுதல் அங்குரார்ப்பணம், ஆசாரியரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், க்ஷணஹோமம், யாகபரிவார மூர்த்திகள் பூஜை, அக்கினிகார்யம், நவாக்னிவிபஜனம், நவாக்னிமுகதரிசனம், பிரதான கும்பங்கள் யாகசாலைப் பிரவேசம், தீபாராதனை.

**வைகாசி 20 ஆம் நாள் (03-06-2009) புதன்கிழமை** விநாயகர் வழிபாடு காலை 6.38 மணிமுதல் 7.28 மணி வரையுள்ள மிதுன லக்கினத்தில் தூபிஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தாபனம், இரத்தினஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம். காலை 8.00 மணிமுதல் விஷேடசந்தி, யாக பூஜை, ஹோமம், மூலமந்திர ஹோமம், தேவீவில்வ அஷ்டோத்தர நாமஹோமம், தீபாராதன்ன.

மாலை 3.30 மணிமுதல் விஷேடசந்தி, யாக பூஜை, ஹோமம், காயத்ரீ மந்திர ஹோமம், திரிதசி ஹோமம், தீபாராதனை, தேவஸ்தோத்திர திருமுறை பாராயணம், பிரசாதம் வழங்கல்.

**வைகாசி 21 ஆம் நாள் (04-06-2009) வியாழக்கிழமை** காலை 8.00 மணி முதல் விஷேட சந்தி, யானுஷ்டானம், யாகபூஜை, பாவனாபிஷேகம், சதுஷ்ஷ்டி உபசார பூஜை, நவாக்கினி ஹோமம், விசேட திரவிய ஹோமம், தீபாராதனை, தேவஸ்தோத்திர திருமுறை பாராயணம், பிரசாதம் வழங்கல். பக்தர்கள் **எண்ணெய்க்காப்பு சாத்துதல்** காலை 7.00 மணிமுதல் மாலை 3.00 மணி வரை.

மாலை 3.30 மணிமுதல் விஷேட சந்தி, பிம்பசுத்தி, மூர்த்திரக்ஷாபந்தனம், நியாசங்கள், யாகபூஜை, ஹோமம், ஸபர்சாகுதி, மஹாபூரணாகுதி, தீபாராதனை, ஆசார்ய சம்பாவனை.

**வைகாசி 22 ஆம் நாள் (05-06-2009) வெள்ளிக்கிழமை** காலை 5.00 மணிக்கு விநாயகர் பூஜை, யாகதீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், சங்கநாதகீத, தாள, டிசகண்டி வாத்திய சமர்ப்பணம், ஆசீர்வாதம், அனந்தகோடி பிரதக்ஷிண நமஸ்காரம், தானாதிகள், அந்தர்பலி, பகிர்பலி, சர்வமங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பங்கள் வீதிப்பிரதக்ஷணம்.

காலை 5.52 மணிக்கு அபிஷேகம், காலை 6.40 மணி முதல் 6.52 மணிவரையுள்ள சுபவேளையில் **மஹாகும்பாபிஷேகம்**, மஹாகவிர் நிவேதனம், தேவர்கள், வழிபாட்டிற்காக திருக்கதவம் காப்பிடுதல், யாக உத்வாசனம், தசமங்கள தரிசனம், திருமுறை ஓதி திருக்கதவம் திறத்தல், ஆசியுரை, மஹாபிஷேகம், விஷேட பூஜை உற்சவம்.

## பிரதிஷ்டா குருமார் விபரம்

*சர்வபோதகாசிரியர்கள்*
*ஆகமகிரியா ஜோதி கிரியா கிரம விஷாரத*
**சிவஸ்ரீ.ச. மகாலிங்கசிவக் குருக்கள்** J.P.
(பிரதம குரு யா/நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார், தேவஸ்தானம்)
**சோதிடர். சிவஸ்ரீ. க. கிருபானந்தக் குருக்கள்** (Dip.in.Edu)
(பிரதம இலஞ்சியாரணியம் மண்டுவில் சோலை அம்மன் தேவஸ்தானம்)

**ஆசியுரை**
**பண்டிதர். சிவஸ்ரீ.தி. பொன்னம்பலவானர் ஐயா**
(பொன்னாலை சித்திவிநாயகர் தேவஸ்தானம்)

**தேவஸ்தோத்திர பாராயணம்**
**சிவத்திரு. தி. இரவீந்திரன் ஐயா** (அச்சுவேலி)
**சிவத்திரு. இ. கணேஸ்வரன் ஐயா** (மீசாலை)

வழக்கம்பரை அம்மன் தேவஸ்தான பிரதம குரு
*ஆகமக்கிரியாரத்னம்*
**சிவஸ்ரீ.சு. சுந்தரராஜக் குருக்கள்**
*குருவருள் ஆசியுடன் நடைபெறும்*
சிவாகம கிரியா பூஷணம் சக்தி உபாசகர் சாதக இளவரசு
**சிவஸ்ரீ.சு. சுந்தர. ஸ்ரீரங்கநாதக் குருக்கள்**
(பிரதமகுரு கலட்டி அம்மன் தேஸ்தானம்)

முகூர்த்த நிர்ணயம்
**சோதிடர். சிவஸ்ரீ. சோ. நடராஜக் குருக்கள்** B.A
(பிரதம குரு சில்லாலை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

**ஆசியுரை**
**அருட்பிரபாகரசீலன்**
**சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராசக்குருக்கள்** (B.A.Dip.in.Edu) MA
(தும்பளை நெல்லண்டை பத்தரகாளி அம்மன் தேவஸ்தானம்)

சர்வசாதகாசிரியர்கள் கிரியாசிரோண்மணி
**சிவஸ்ரீ. சி. மகேந்திரநாதக் குருக்கள்**
(பிரதம குரு மாயக்கைப் பிள்ளையார் தேவஸ்தானம்)
*சாதகஞானபானு*
**சிவஸ்ரீ. ந. கேதீஸ்வரக் குருக்கள்**
(பிரதம குரு அனுராதபுரம் கதிரேசன் தேவஸ்தானம்)
செஞ்சொற் சாதகன்
**சிவஸ்ரீ. மு. சசிதரக் குருக்கள்** B.Sc.Hons
(செயலாளர் சைவக்குருமணிகள் மிஷன் நாயன்மார்கட்டு)

**திருமுறை பாராயணம்**
**சிவத்திரு. ந. சரவணபவன் ஐயா** (கலட்டி)
**சிவத்திரு. ம. சந்திரமோகன் ஐயா** (கரணவாய்)

## ஏனைய குருமார்கள்

சிவஸ்ரீ. ச. மகேஸ்வரக் குருக்கள்(நாயன்மார்கட்டு), சிவஸ்ரீ. தெ. சோமசுந்தரக் குருக்கள் (காரைநகர்), சிவஸ்ரீ. சி.நித்தியானந்தக் குருக்கள் (நீராவியடி), சிவஸ்ரீ. பா. செல்வசேனக் குருக்கள் (இருபாலை), சிவஸ்ரீ. கி. கிருபாகரக் குருக்கள் (திருநெல்வேலி), சிவஸ்ரீ. சி. இந்திரராஜக் குருக்கள் (துன்னாலை), சிவஸ்ரீ. தி. ஜெயச்சந்திரக் குருக்கள் (அச்சுவேலி), சிவஸ்ரீ. பா. சோமசுந்தரக் குருக்கள் (அச்சுவேலி), சிவஸ்ரீ. சி. கமல்ராஜ் குருக்கள் (யாழ்-வண்ணை), சிவஸ்ரீ. இ. திருக்குமாரக் குருக்கள் (வல்வெட்டி), சிவஸ்ரீ. சி.மகேஸ்வரக்குருக்கள் (திருநெல்வேலி), சிவஸ்ரீ.சேவற்கொடியோன் குருக்கள் (கொடாவில்), சிவஸ்ரீ.இ. பாலமனோன் குருக்கள்(ஏழாலை), சிவஸ்ரீ. வே.சண்முகராசக் குருக்கள் (சங்கானை), சிவஸ்ரீ.சி.குகராசக் குருக்கள் (பருத்தித்துறை), சிவஸ்ரீ.த. விசாகரத்தினக் குருக்கள் (நீராவியடி).

*உபசாதகர்கள்*

சிவத்திரு.ம.சந்திரகாசன் ஐயா (கரணவாய்), சிவஸ்ரீ தி.ஜெயராஜ் ஐயா (மண்கும்பான்), சிவத்திரு. க. அகிலன் ஐயா (சங்கானை), சிவஸ்ரீ வை.இராமேஸ்வரன் ஐயா (மந்திகை). சிவஸ்ரீ. வை. இராஜேஸ்வரன் ஐயா (தும்பளை)

*யாகசம்ரட்சகர்கள்*

சிவஸ்ரீ. ச. கணநாதன் ஐயா (மண்கும்பான்), சிவத்திரு. இ.கணேசலிங்கம் ஐயா (சங்கரத்தை), சிவத்திரு. க. மயூரன் ஐயா (சங்கானை), சிவத்திரு. கோணேஸ்வரன் ஐயா (கலட்டி), சிவத்திரு. ந. வருணதேவன் ஐயா (அச்சுவேலி), சிவஸ்ரீ. சி. சிறீகரன் ஐயா (அல்வாய்), சிவத்திரு. தி. சுகந்தன் ஐயா (கரம்பன்), சிவஸ்ரீ. செ. சரவணன் ஐயா (நாயன்மார்கட்டு), சிவத்திரு. வே. முரளிஐயா (கலட்டி), சிவத்திரு. ப. ஸ்ரீபாலசுந்தரம் ஐயா (ஆனைக்கோட்டை), சிவத்திரு. க. சிவபாதம் ஐயா (கரவெட்டி), சிவத்திரு. அ. ஐயப்பதாசன் ஐயா (கல்வியங்காடு).

பஞ்சகர்த்தா
கலாநிதி க.குணராசா(தலைவர்)
திரு.தெ.சிவராஜலிங்கம்
திருமதி.ம.ஜோதிநாதன்
திரு.இ.இலங்கைநாயகம்
திரு.தி.இராசேந்திரன் (முகாமையாளர்)

| மங்களவாத்தியம் | ஆச்சாரியார் | சிற்பாசாரியார் | யாகசாலை அமைப்பு | வர்ணவேலை |
|---|---|---|---|---|
| க.ஜெகன் (சேனா) | திரு.பாஸ்கரன் | ந.கிருஷ்ணகுமார் (சிவா) (அராலி) | எஸ்.சந்திரன் (கொக்குவில்) | ந.கிருஷ்ணகுமார் (சிவா) (அரலி) |

| திரு.பொ.மகேசலிங்கம் | திரு.எஸ்.சிவபாலன் | திரு.ந.குலசிங்கம் | திரு.வே.இரத்தினவேலு | சி.சின்னராசா (கலட்டி) |
|---|---|---|---|---|
| செயலாளர் | உபசெயலாளர் | பொருளாளர் | உப பொருளாளர் | அப்பன் ஆட்ஸ்(கலட்டி) |
| | | | | சிவகுமார் ஆட்ஸ் (கலட்டி) |

குறிப்பு :- கும்பாபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர் ,பூக்கள், சமித்துவகைகள், அபிஷேகத்திரவியங்கள் போன்றவற்றை ஆலயத்தில் வழங்கியும் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகத்தில் பங்கு கொண்டு அம்பிகையின் அருளைப்பெறுவீர்களாக.

**தேவஸ்தானம்**

# மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி

(வார்ம்ஸ்லே)

இருபது-20 உலக கோப்பை பயிற்சி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அயர்லாந்தை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஐ.சி.சி. சார்பில் 2ஆவது இருபது-20 உலகக் கோப்பைத் தொடர் எதிர்வரும் 5ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகிறது.

இதற்கான ஒவ்வொரு அணிகளும் பயிற்சிப் போட்டியில் விளையாடி வருகின்றன.

வார்ம்ஸ்லேயில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள்-அயர்லாந்து அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில வென்ற அயர்லாந்து முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு பிரே (08),ஸ்டிர்லிங் (13), ஓ பிரஜான் (08) உள்ளிட்ட முதல் தர துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டத்துடன் வெளியேறி ஏமாற்றினர்.

அடுத்து வந்த மூனே (20) ஓரளவு ஓட்டங்கள் சேர்த்தார்.

பின்னர் பொறுப்பாக ஆடிய அணித்தலைவர் ஜோன்ஸ்டன் (16), மக்கலன் (25) அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

அயர்லாந்து அணி 19.2 ஓவரில் 119 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் பேகர் 3,போலார்ட் 2 விக்கெட் வீழ்த்தினர்.

சுலப இலக்கை விரட்டிய மேற்கிந்திய அணிக்கு சர்வான் (06) மோசமான ஆரம்பத்தை கொடுத்தார்.

பின்னர் இணைநத பிளஸ்டர் (22),சிம்மன்ஸ் (21) ஜோடி ஓரளவு ஓட்டங்கள் சேர்த்து நம்பிக்கை அளித்தது.

அடுத்து வந்த மார்சல் (05), போலார்ட் (18) விரைவில் வெளியேறினர்.

பின்னர் அபாரமாக ஆடிய ராம்டீன் (24),பேர்னார்ட் (16) அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி 17.5 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 120 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அயர்லாந்து சார்பில் ரான்கின் 2 விக்கெட் டை வீழ்த்தினார்.

# யாருக்குக் கோப்பை



ஐ.சி.சி. சார்பில் 2 ஆவது இருபது-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் 5 ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம் பமாகிறது. இதில் பங்கேற்கும் தோனி (இந்தியா), சங்கக்கார (இலங்கை) உள்ளிட்ட 12 அணிகளின் தலைவர்கள் லண்டனில் உள்ள கில்ட் ஹோலில் முன்பு வைக்கப்பட்ட கோப்பையின் பின் அணி வகுத்து நிற்பதை படத்தில் காணலாம்.

# சொந்த சாதனையை டைசன் கே முறியடித்தார்



ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் டைசன் கே தனது சொந்த சாதனையை முறியடித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ரீ பொக் கிராண்ட் பிரிக்ஸ் மெய்வல்லுனர் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் டைசன் கே 19.58 வினாடிகளில் பந்தயத் தூரத்தை முடித்து முதலிடத்தைப் பிடித்தார். இது 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வீரர் ஒருவரின் 3ஆவது சிறந்த காலமாக பதிவானது.

கடந்த ஆண்டு நடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஜமைக்காவின் உசையின் போல்ட் 200 மீற்றர் தூரத்தை 19.30 வினாடிகளில் முடித்தது தற்போதைய உலக சாதனை என்பதோடு முன்னாள் அமெரிக்க ஜாம்பவான் மைக்கெல் ஜோன்சன் 1996ஆம் ஆண்டில் நடந்த அட்லான்டா ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் தூரத்தை 19.32 வினாடிகளில் முடித்தது இதன் இரண்டாவது இடத்தில் காணப்படுகிறது.

அத்துடன் டைசன் கே 200 மீற்றர் போட்டியில் பதிவு செய்து கொண்ட சிறந்த காலமும் இது வாகும். முன்னதாக 2007ஆம் ஆண்டு நடந்த உலக சம்பியன் சிப் போட்டியில் 200 மீற்றர் தூரத்தை 19.62 வினாடி களில் முடித்ததே சாதனையாக இருந்தது.

ரீ பொக் கிராண்ட் பிரிக்ஸ் மெய்வல்லுனர் போட்டியில் 200 மீற்றர் ஓட்ட போட்டியின் இரண்டாவது இடத்தை 19.98 வினாடிகளில் பந்தய தூரத்தை முடித்த அமெரிக் காவின் வொலஸ் ஸ்பியர்மன் பெற்றதோடு 20.30 வினாடிகளில் பந்தய தூரத்தை முடித்த ஜரமி வொர்னர் 3ஆவது இடத்தைப் பிடித்தார்.



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட வீரர்கள் பயிற்றுவிப்பாளர்,விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

## பிரெஞ்சு ஓபன்

# ஷரபோவா,சபீனா காலிறுதிக்கு தகுதி அனா இவானோவிச் அதிர்ச்சித் தோல்வி



(பாரிஸ்)

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனைகள் மரியா ஷரபோவா மற்றும் தினாரா சபீனா காலிறுதிக்கு முன்னேறி உள்ளனர்.

ஆண்கள் பிரிவில் ஆன்டி முரே மற்றும் கோன்சாலஸ் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

புகழ்பெற்ற பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் அணி பிரிவு நான்காவது சுற்று ஆட்டத்தில் உலகின் முன்னணி வீராங்கனையான ரஷ்யாவின் தினாரா சபீனா பிரான்ஸ் வீராங்கனை அராவனே ரேசாய்வை 6-1, 6-0 என எளிதாக வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா சீனாவின் லீ நாவை தோற்கடித்தார்.

இந்தப் போட்டியில் ஷரபோவா 6-4,0-4,6-4 என போராடி வென்றார்.

காலிறுதியில் ஷரபோவா ஸ்லோவாக்கிய வீராங்கனை டொமினிகாவோடு மோதுகிறார்.

நடப்பு சம்பியனான செர்பியாவின் அனா இவானோவிச் 4 ஆவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசெரென்கா அவரை 6-2, 6-3 என அதிர்ச்சித் தோல்வியில் ஆழ்த்தினார்.



அடுத்த சுற்றில் அசெரென்கா முதல்நிலை வீராங்கனை சபீனாவோடு மோதவுள்ளார்.

ஆண்கள் பிரிவில் 3 ஆவது நிலை வீரரான அன்டிமுரே, சிலிக்கை 7-5,7-6,6-1 என வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

சிலிவீரர் கோன்சாலஸ், ருமேனிய வீரர் விக்டரை வீழ்த்தினார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 88



முரளிதரன் சார்ஜா முக்கோணத் தொடரில் 5 போட்டிகளில் விளையாடி 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் இலங்கை அணி கிண்ணத்தை சுவீகரிக்க வழியமைத்த முரளிதரன் தொடரின் சிறந்த பந்து வீச்சாளர் விருதையும் வென்றார்.

சார்ஜாவிலிருந்து வெற்றியுடன் தாயகம் திரும்பிய இலங்கை அணி பாகிஸ்தான் அணியுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

பாலா

இதில் முதலாவது டெஸ்ட் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 330 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களைச் சேர்த்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 378 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையுமிழந்தது.


இதில் துல்லியமாகு பந்துவீசிய முரளிதரன் 53 ஓவர்கள் வீசி 19 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 98 ஓட்டங்களைக் கொடுத்து இஜாஸ் அகமெட் (113), இன்சமாம் உல் ஹக் (12), அஜாஸ் முஜ்தபா(21), மொய்ங்கான்(0) முஸ்தாக் அகமெட்(26) மற்றும் சகீட் நஸீர் (2) ஆகியோரை வெளியேற்றி 6 விக்கெட்டுகளை சாய்த்தார்.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸில் 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி 423 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுகளையிழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.



எனினும் போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டம் நிறைவு பெற போட்டி சமனிலையானது.

# எண் விளையாட்டு-83



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும்.

- இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதி தான்.

அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக் கப்பட்டுள் ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



## நுளம்புகளைப் பரவச்...

குற்றவாளியாகக் காணப்படு கின்றவர்களுக்கு ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரை அபராதமும் 6 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படும். இது தொடர்பான சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்து வருவதுடன் இது வரையில் நாடு முழுவதும் 7 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்த நோயைப் பரப்பும் நுளம்புகள் பரவாமல் இருக்கும் விதத்தில் சுற்றுச் சூழலை மக்கள் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளர் டாக்டர் உபுல் குணசேகர மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

நாடு பூராகவும் அரசாங்க வைத்திய சாலைகளின் தரவுகளின் பிரகாரம் இதுவரையில் 7 ஆயிரம் பேர் டெங்குக் காய்ச்சலினால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இந் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுவரலாம். எனவே இத் தொகை அதிகமாகவே காணப்படும்.

இதுவரையில் ஒரு டாக்டர், 2 தாதிமார், 20 சிறுவர்கள் உட்பட 85 பேர் டெங்குக் காய்ச்சலால் நாடு பூராகவும் உயிரிழந்துள்ளனர். தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளது. எனவே மக்கள் தமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதில் அதிக க்வனம் செலுத்த வேண்டும் என்றார். (ச-5)

## வன்னி உயி...

இலங்கை அரசுடனும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களுடனும் பகிர்ந்து கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் பரிமாறப்பட்ட ஆவணங்களில் தெரிவிக்கப்பட்ட புள்ளி விவரங்களே தற்போது பத்திரிகைகளில் ஐ.நாவை மேற்கோள்காட்டி வெளியாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இன்னமும் சரியான புள்ளி விவரங்களை உறுதி செய்ய முயல்கிறோம். மோதல் நடைபெற்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் இதனை எவ்வாறு உறுதி செய்வது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

## பேரா.கிருஷ்ணராஜாவின் பூதவுடலுக்கு பல்கலைக்கழகத்தில் இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் காலமான யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜாவின் பூதவுடல் இன்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்திற்கு எடுத்துவரப்படும் அவரது பூதவுடல் கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது.

பின்னர் நல்லூரில் உள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்படும் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை புதன் கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளுக்கு பொது...

பொறுப்பாக இருக்க முடியாது. அதனால் பொதுவாக யுத்தம் முடிபடைகின்ற காலத்தில் அந்த நாட்டினுடைய அரசு இவ்விதமான போராளிகளிற்கு ஒரு மன்னிப்பைக் கொடுத்து அவர்கள் பொதுவாழ்க்கைக்கு திரும்புவதற்கு ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுப்பது வழக்கம். அது ஒரு நியாயமான நடைமுறை. இந்த இளைஞர்களைப் பொறுத்தவரை அவ்வாறானதொரு ஒழுங்கு தெளிவாக இருப்பதாக எமக்குப்படவில்லை. தென்பகுதியில் ஜே.வி.பியால் நடத்தப்பட்ட கலவரத்தின்போது ஒரு தடவைக்கு மேலாக அவர்களிற்கு பொதுமன்னிப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு கட்சியாக இருக்கிறார்கள்.

அரசாங்கம் மீது எந்த முடிபையும் நாங்கள் திணிக்கமுடியாது. அந்த உரித்து எமக்கு இருக்க முடியாது. இவ் விடயம் தொடர்பாக அரசு நியாயமான முறையில் சிந்தித்து கூடுதலான போராளிகள் தொடர்பாக ஆலோசனை நடத்தி நல்ல முடிபிற்கு வரவேண்டும். இது அவர்களுடைய தார்மீகப்பொறுப்பு. இதுவே நாகரிகமான செயலாகவும் இருக்கும்.

தென்னாபிரிக்காவில் ஏற்படுத்தப்பட்டது போல ஒரு நல்லிணக்க இயக்கம் ஏற்படுத்தப்பட்டால் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளக் கூடிய நல்லதொரு விடயம். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம். அவ்வாறானதொரு பாதையில் நாங்கள் செல்வதற்கு ஆரம்பித்தால் அது நேர்மையான பாதையாக இருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச-14)

## அரசியல் கட்டமைப்பை...

தடுப்பு முகாம்களுக்குள் தனி மைப்படுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு வன்னியில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்கான நியாயம் வழங்க தவறியமை குறித்து எமது விசனத்தையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

கள யதார்த்தத்தின் அடிப்படையிலும் மாற்றமடைந்துவரும் உலக அரசியல் ஒழுங்கினைக் கருத்தில் கொண்டும் துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்து வன்முறையற்ற வழிகளூடாக போராட உறுதி பூண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் ஒற்றுமையினையும் அவர்களின் அளப்பரிய ஆற்றல்களையும் அவர்களால் புலம் பெயர் தேசங்களில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நன்மதிப்பினையுமே தங்கள் ஆயுதங்களாக கையில் எடுத்துள்ளனர்.

இன்று நம் முன்னே பாரிய தேசியக் கடமை காத்துக்கிடக்கின்றது. நாம் மிகவும் உறுதியுடனும் ஒருமைப்பாட்டுடனும் செயற்பட வேண் டியது மிகவும் அவசியமான தருணம் இது.

இக் கடமையின்னை முழுமையான பலத்துடனும் சிறப்புடனும் நிறைவேற்றுவதற்கு அவதூற்றுப் பிரசாரங்களும் வதந்திகளும் தவறான செய்திகளும் இடையூறானவை.

இவற்றை புறந்தள்ளி நமது தாயகத்திற்கும் மக்களுக்குமான நமது கடமைகளை ஆற்றுவதற்கு நாம் அனைவரும் உறுதி கொள்வோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளுக்கு எதிரான...

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமான இலங்கைப் போரின் கடைசி பகுதியில் இலங்கைக்கு இந்தியா மறைமுகமாக துணை போனது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவ வேண்டும் என்று முடிபு செய்த இந்தியா, இறுதிவரை அதில் உறுதியாக இருந்தது. அதே நேரத்தில் களத்தில் என்ன நடக்கிறது என்பதை கவனித்து தடுக்க இந்தியா தவறிவிட்டது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு வருத்தமளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் உள்ளது என்று இந்திய படையில் உயர் அதிகாரியாக பணியாற்றியவரும் இலங்கை சென்ற அமைதிப் படையின் தளபதியாக இருந்தவருமான அசோக் மேத்தா லண்டனில் இருந்து வெளிவரும் த ரைமஸ் நாளிதழுக்கு அளித்த நேர்காணலில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இலங்கைக்கான ஆயுத விற்பனையை சீனாவும் பாகிஸ்தானும் கடந்த சில ஆண்டு களில் அதிகரித்தன. இலங்கையில் அந்த நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்துவிடக்கூடாது என்பதற்காக இந்தியாவும் ஆயுத உதவிகளை வழங்கியது.

அது மட்டுமின்றி இப் போதைய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் கணவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்க வேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் விரும்பியது என்றும் அசோக் மேத்தா கூறினார்.

இந்தியாவில் 6 கோடி தமிழர்கள் இருக்கும் போதிலும் அவர்களின் உணர்வுகளை பொருட்படுத்தாமல் இலங்கைப் படையினருக்கு ஆயுத உதவி, போர்ப் பயிற்சி ஆகியவற்றை இந்தியா வழங்கியது விடுதலைப் புலிகள் குறித்த உளவுத் தகவல்களையும் இலங்கைக்கு இந்தியா தெரிவித்தது என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் த ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது.

அது மட்டுமின்றி இலங்கை அரசுக்கு இந்தியா தொடர்ந்து தூதரக வழியில் ஆதரவு தெரிவித்தது என்றும் போர்ப் பகுதியில் சிக்கியிருந்த தமிழ் மக்களை காப்பாற்ற, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி போர் நிறுத்தத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்றும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்ததாக த ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பொது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை சீனா, ரசியா ஆகிய நாடுகளுடன் சேர்ந்து கொண்டு இந்தியாவும் முறியடித்தது.

மேலும் இலங்கையை புகழ்ந்து அந் நாடே கொண்டுவந்த தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்தது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் காசா பகுதி மீது குண்டுவீச்சு நடத்தி 926 பேரை படுகொலை செய்ததற்காக இஸ்ரேல் மீது போரியல் குற்ற வழக்கு தொடர்ந்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்த இந்திய அரசு, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மட்டும் எதிர்த்ததாக த ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது. (ச-5)


மாபெரும் கருத்தரங்கு

A/L கலைப்பிரிவு - 2009

தமிழ், இந்து நாகரிகம், இந்து சமயம்

- இலங்கையின் தரம் வாய்ந்த தமிழ், இந்து நாகரிக விரிவுரையாளர்கள் கலந்து கொள்வர்.
- எதிர்பார்க்கை வினாக்களும், விடைகளும், புள்ளியிடும் திட்டமும் விரிவாக விளக்கப்படும்.
- விரிவுரையாளர்கள், மாணவர்கள் நலன் கருதி முன் அனுமதி பெறுகின்ற 250 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
- அனுமதிகள் 02/06/2009 செவ்வாய் மாலை 4.00 மணிக்கு வழங்கப்படும்.
- விரிவுரைகள் ஆரம்பம்:-06/06/2009 சனி காலை 10.00 மணி.
- ஒரு பாடத்திற்கான கட்டணம் 500/- ரூபா.
- விரிவுரைகள் தொடர்ந்து யூலை 15-ம் திகதி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களிற்கு :- உதவிப் பதிவாளர், அறிவொளி (உயர் கல்விப் பிரிவு) நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-2518-ஐ)


## மரண அறிவித்தல்

### துரைசாமி ஐயர் சிவசிதம்பரதேசிகர்

மீசாலையை பிறப்பிடமாகவும் கோயிலாக்கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசாமி ஐயர் சிவசிதம்பரதேசிகர் 01.06.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசாமி ஐயர் தம்பதிகளின் அன்பு மகனும், இராசலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும், சண்முகதாஸ் குருக்கள்(இருபாலை), சிவராசா ஐயர்(சுவிஸ்) ,துரைசாமி ஐயர்(கைதடி பிரதேச சபை), சச்சிதானந்த ஐயர்(உரிமையாளர் சச்சியா இரும்பகம்), கோதண்டதாஸ் குருக்கள்(மட்டக்களப்பு), புவனேஸ்வரி(தும்பளை), லம்போதரஜோதி(நல்லூர்), அமிர்தவல்லி(குடத்தனை), ஆகியோரின் பாசமிகு தந்தையும், வதனா, விக்கினேஸ்வரி(மாலா), செல்வம் சிவமலர், சோமஸ்கந்தகுருக்கள்(தும்பளை), கலைச்செல்வன்(குடத்தனை) சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபி, சித்திரா, சிவரூபன் , சிவசுதன், உதயதாஸ் ஐயர், கௌரி சௌமியா, கௌரிசங்கர், லவன், லாவண்யா, லாவண்யன், பிரபாழினி, ஜீவிதா, தனஞ்சயன், சங்கீர்த்தனி, சிவமதி, கலைவாணன், கலையரசன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.06.2009 (இன்று) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு அராலி மத்தியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூனாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
சி.சச்சிதானந்த ஐயர்(மகன்)
உரிமையாளர்
சச்சியா இரும்பகம் - வட்டுக்கோட்டை

(C-2526)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.